ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

22.02.2012 - மலர் 08, இதழ் 51




## இரண்டாவது டைட்டானிக்காக மாறிய 'கொஸ்ட்டா கொன்கோடியா'

## வாசகர் முகம்

## இருஅலகுக் குருவி.... 'கொம்பு மூக்கன்'

## 190 மில்லியன் வருடங்கள் தொன்மையான டைனோஸர் முட்டைகள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒல்லாந்த வருமான அதிகாரிகள்

ஒல்லாந்தர்களின் ஒரு நிறைவேற்றுப் பிரிவிற்குள் கோட்டையும் திசாவையொன்றும் அடங்கும். கொழும்பு திசாவை என்பது கற்பிட்டியிலிருந்து பெந்தர கங்கை வரையுள்ள பிரதேசமாகும். இது திசாதிபதி ஒருவரின்கீழ் நிர்வகிக்கப்பட்டது. கற்பிட்டி, நீர்கொழும்பு, களுத்துறை ஆகிய இடங்களில் சிரேஷ்ட வருமான அதிகாரிகள் இருந்தனர். மன்னாரில் இருந்து கூடாநாடு உட்பட, திருகோணமலைக்கு வடக்கேயுள்ள பிரதேசங்கள் அனைத்தும் யாழ்ப்பாண திசாவைக்குள் அடங்கும். இது ஒரு திசாதிபதியின்கீழ் நிர்வகிக்கப்பட்டது. மன்னாரிலும் திருகோணமலையிலும் சிரேஷ்ட வருமான அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். மட்டக்களப்பிலும் வருமான அதிகாரி ஒருவர் இருந்தார். அது யாழ்ப்பாண திசாவையின் அதிகாரத்தின்கீழ் இருந்தது. காலி நிறைவேற்றுப் பிரிவிற்குள் அடங்கும் திசாவை மாத்தறை திசாவை என அழைக்கப்பட்டது. இதுவும் வேறொரு திசாதிபதியின்கீழ் நிர்வகிக்கப்பட்டது.

இவர்களின் ஆட்சியில் ஒரு திசாவை பல கோறளைகளை உள்ளடக்கி இருந்தது. கோறளைகள் இரண்டிற்கும் கோறளை ஒருவரின்கீழ் நிர்வாகம் நடைபெற்றது. கோறளையின்கீழ் அதிகாரியாக இருந்தவர் அத்துகோறளை என அழைக்கப்பட்டார். பற்று ஒன்று அத்துகோறளையின் பொறுப்பில் இருக்கும். அவ்வாறே, கிராமங்களுக்குப் பொறுப்பானவர்கள் விதானைமார்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களின் பணிகளாக சமாதானத்தை ஏற்படுத்தல், வருமானத்தை சேகரித்தல், விவசாயம் மற்றும் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன அடங்கும். அரசனின் ஆட்சியில் வழங்கப்பட்டது போலவே, இவர்களுக்கும் நிலங்கள் சன்மானமாக வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சா/தர அழகியற் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் ஆரம்பம்



கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளின் அழகியற் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் பெப்ரவரி 21 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 2 ஆம் திகதி வரை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சங்கீதம், நடனம், நாடகம், அரங்கியல் ஆகிய அழகியல் பாட எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளும் குறித்த செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியது அத்தியாவசியம் எனவும் அப்போதே இறுதிப் பெறுபேற்றை தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ள பரீட்சைகள் திணைக்களம் இது தொடர்பாக பரீட்சார்த்திகளுக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிபர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, டிசம்பர் மாதம் நடைபெற்ற எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் இந்த செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றத் தேவையில்லை எனவும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.


விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



## வேலை வாய்ப்பு (Freelance)

**Journalist/ Page Layout Artist**

'விஜய்' பத்திரிகையில் கடமையாற்றுவதற்கு கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

**❖ சுதந்திர ஊடகவியலாளர் (Freelance Journalist)**

- ஆசிரிய பீடத்தில் கடமையாற்றக்கூடிய, எடிட்டிங் செய்யும் திறமையுள்ள, தமிழ்மொழியில் தேர்ச்சியுள்ள (சிங்களம்/ ஆங்கிலம் மேலதிக தகைமை).
- சகல விடயங்களிலும் ஒருங்கிணைந்து ஈடுபாட்டுடன் செய்யக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். (கணினி அறிவும் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)
- **தகைமை:** க.பொ.த. (உ/தரம்) - தமிழில் சித்தி.

**❖ பக்க வடிவமைப்பாளர் (Page Layout Artist)**

- பக்கங்களை வடிவமைப்பதில் அனுபவமுள்ள, புதிய மாற்றங்களை வெளிப்படுத்தக்கூடிய பக்க வடிவமைப்பாளர்களாக இருத்தல் வேண்டும். ( **Type setting** மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

உங்கள் விண்ணப்பங்களை சுயவிபரக்கோவையுடன் இணைத்து கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிடுங்கள்.

முகவரி: விண்ணப்பம்,
'விஜய்'
த.பெ.இல. 2037,
கொழும்பு.


# உ/தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான விசாரணை மார்ச்சில்



கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணை செய்வதற்கு ஏற்றுக் கொண்டுள்ளது. மேற்படி, மனுக்களை இலங்கை ஆசிரியர் சங்கமும் 16 மாணவர்களும் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான ஆரம்ப விசாரணைகளை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையில் மூன்று நீதியரசர்களைக்கொண்ட குழு மேற்கொண்டிருந்தது. இதன்போதே, மேற்படி மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், மார்ச் மாதம் 10 ஆம் திகதி விசாரணைகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற குறித்த க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பல்வேறு வகையிலான முறைகேடு, குழப்பங்கள் இருப்பதாக பலத்த விமர்சனங்கள் எழுந்தமையும் இது தொடர்பாக மாணவர்கள், பெற்றோர் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அதிபர் நியமனங்களை நியாயமாக வழங்குமாறு நீதிமன்றம் தீர்ப்பு




6,700 ஆசிரியர்களை அதிபர் சேவைக்குள் உள்ளீர்த்து, அவர்களுக்கு அதிபர் பதவிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய, போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் 3,200 பேரையும் கடமை நிறைவேற்று அதிபர்களிலிருந்து 3,500 பேரையும் இந்த நியமனங்களுக்கு உள்ளீர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை அதிபர் சேவை 3 ஆம் தரத்திற்கு 1,223 பேரும் இரண்டாம் தரத்திற்கு 1,977 பேரும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஏற்கனவே, 2009 ஆம், 2010 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அதிபர் நியமனங்களினால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு 29.11.2011 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, கல்வி அமைச்சும் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவும் இணக்கப்பாட்டிற்கு வராததால், இந்த வழக்கு விசாரணை 2012 ஜனவரி 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதன்படி, ஜனவரி 26 ஆம் திகதி நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பின்படி, உரிய புள்ளிகளின் அடிப்படையில் நியாயமான முறையில் அதிபர் நியமனங்கள் வழங்கப்படுவதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

# வட மாகாணத்தில் இயங்காத பாடசாலைகள்



வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் 101 பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாக கணிப்பீடொன்றின்மூலம் தெரியவந்துள்ளது. இதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகள் செயற்படவில்லை. அதாவது, யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 65 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் மொத்தம் 495 பாடசாலைகள் உள்ள நிலையில், இதில் 65 பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றமை சுட்டிக் காட்டத்தக்கது.

# தமிழ்த் தினப் போட்டிகள் மார்ச் மாதத்தில்...



பாடசாலைகளுக்கிடையிலான 2012 ஆம் ஆண்டுக்கான நாடளாவிய ரீதியிலான தமிழ் மொழித் தினப் போட்டிகள் மார்ச் மாதம் ஆரம்பமாக இருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, பாடசாலை மட்டத்திலான போட்டிகள் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகவும் வலய மட்டத்திலான போட்டிகள் மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னதாகவும் மாகாண மட்டத்திலான போட்டிகள் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாகவும் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்று பாடசாலைளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும், தேசிய மட்டத்திலான போட்டிக்கான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சுவாமி விபுலானந்தர் நினைவு தினமான ஜூலை மாதம் 19 ஆம் திகதி பரிசளிப்பு விழா நடைபெறுவதற்கு திகதி குறிக்கப்பட்டுள்ளமையால், இப்போட்டிகளுக்கென பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாசகர் முகம்**

'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர் **சேம் ஸ்டேன்லி,** பிரதான வீதி, வட்டவளை.




## 30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

**ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்**

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
அழகிய பேக் (Bag) ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம்.
அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன
எல்லா மாவணவ/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.

எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081 222 77 11 / 0773 123 523


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தகவல் தொடர்புகளின் படிமுறை வளர்ச்சி



ஆரம்பகால மனிதர்கள் ஒருவருக்கொருவர் சைகைகளின் மூலமே செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். இதனைப் புரிந்து கொள்ளப் பெரும் சிரமம் ஏற்பட்டதோடு, கால தாமதமும் ஏற்பட்டது. சில தகவல்கள் தவறாகவும் புரிந்து கொள்ளப்பட்டன.

## ஒலியின் மூலம் செய்திகள்

நாட்கள் செல்லச் செல்ல ஒலியின் மூலமும் செய்திகள் தெரிவிக்கப்பட்டன. அந்நிய நாட்டுப் படையெடுப்பின்போது, அச்செய்தியை பொதுமக்களுக்கும் படை



வீரர்களுக்கும் தெரிவிக்க 'கொம்பு' எனப்படும் ஊதுகுழல் பயன்படுத்தப்பட்டது. அக்கால கட்டத்தில் மாடு மேய்ப்பவர்கள் ஏற்படுத்தும் ஒருவித வித்தியாசமான சத்தத்தைக் கண்டுபிடித்து மாடுகள் ஒன்று கூடியதாகவும் ஒருசில புராணக் கதைகளில் கூறப்படுகின்றது.

## ஓவிய எழுத்துக்கள்



அக்கால கட்டத்தில் செய்திகள் படங்களாக வரைந்து பரிமாறப்பட்டன. இவை ஓவிய எழுத்துக்கள் எனப்பட்டன. ஒரு நாட்டிலிருந்து அடுத்த நாட்டிற்கு மன்னனின் வரவைத் தெரிவிக்க தூதுவர்கள்மூலம் ஓவியங்களாக கருத்துக்கள் அல்லது செய்திகள் வரைந்து அனுப்பப்பட்டன. அதற்கமைய, மூன்று நாட்களில் மன்னன் வருவதாக இருந்தால் மூன்று சூரியன்கள் வரையப்பட்டிருக்கும். அவ்வாறே, குதிரைமீது ஒருவன் அமர்ந்திருப்பதைப்போன்று இருந்தால் குதிரையில் வருவதாக அர்த்தப்படும். கடல் வழியாகவோ, ஆறு வழியாகவோ வருவதாக இருந்தால் படகில் ஒருவன் அமர்ந்திருப்பதுபோல் ஓவியம் வரையப்பட்டிருக்கும். இவ்வாறே, ஓவிய எழுத்துக்கள்மூலம் செய்திகள் அக்காலகட்டத்தில் அறிவிக்கப்பட்டன.

## பிராமி எழுத்துக்கள்

பழங்கால இந்துக்களும் சமணர்களும் எழுத்துக்கள் பிரம்மாவினால் படைக்கப்பட்டது என்றே கருதினர். இதைப் பின்பற்றியே பிரம்மதேவன் தன் கரங்களில் ஓலைச்சுவடியை வைத்திருப்பதுபோல உருவாக்கப்பட்டார். சீன நாட்டிலிருந்து இந்தியா வந்த யுவான் சுவாங் மற்றும் சீன நாட்டு பௌத்த பிக்குவான பாவான் ஷுவ் ஆகியோர் தமது நூல்களில் இடது புறத்தில் இருந்து வலது புறமாக எழுதப்படும் எழுத்துக்கள் பிரம்மாவினால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தை உறுதிப்படுத்தினர். இதுவே, 'பிராமி' எனப்படும் லிபியாகக் (எழுத்து) கருதப்படுகிறது.

இந்த லிபியையே பழங்கால மன்னர்கள் தங்கள் கல்வெட்டுக்களில் பயன்படுத்தி வந்தனர். அதற்கமைய, கி.பி 350 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தை அறிந்து கொள்ள பிராமி எழுத்துக்களே பெரிதும் உதவின. தற்போதும் அது 'பிராமி' எழுத்துக்கள் என்ற பெயரிலேயே வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் வடமொழியை எழுதப் பழங்காலம் தொட்டே பயன்பட்ட லிபியே 'கிரந்தம்' எனப்பட்டது. வடமொழியில் 'கிரந்தம் என்றால் 'நூல்' என்று பொருள்படும்.

## பழங்கால எழுத்துக்கள்

காலந்தோறும் வெவ்வேறு வடிவங்களில் மாறிவந்த எழுத்துக்கள் தொடராக எழுதும் முறைகளிலும் வரி வடிவங்களிலும் பெரும் மாறுதல்களை அடைந்தே வந்துள்ளன. இவை பழங்கால எழுத்துக்கள் என்ற பெயரில் கி.பி 650 முதல் 950 ஆண்டுகள் வரை




புழக்கத்தில் இருந்தன. பல்லவ மன்னர்களின் பரம்பரையில் வந்த நந்திவர்மன் காலத்திலும் பாண்டியர்களின் முதல் அரசாட்சிக் காலத்திலும் சுந்தர சோழனின் மூதாதையர் ஆட்சியிலும் இவ்வகை எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டன.

தென் இந்தியாவின் தஞ்சையில் இருந்து தரணி ஆண்ட சோழர்களின் கல்வெட்டுகளின்மூலம் மத்தியகால எழுத்துக்களைப் பற்றி அறிய வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. இவ்வகை எழுத்துக்கள் கி.பி 950 ஆம் ஆண்டு முதல் 1250 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டன. கி.பி 1250 ஆம் ஆண்டுக்குப்பின் அரசாட்சி புரிந்த பிற்கால பாண்டியர்கள் மற்றும் விஜயநகர மன்னர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களே, தற்கால எழுத்து வடிவங்களாகின.



## தமிழ் கிரந்த எழுத்து

கி.பி 7 ஆம் நூற்றாண்டுகளில் இருந்துதான்



தமிழ் கிரந்த எழுத்துகள், கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. வளைந்த கோடுகளை அதிகமாகப் பயன்படுத்தியதால், இவ்வகை எழுத்துக்கள் 'வட்டெழுத்து' எனப்பட்டன. இவ்வகை வட்டெழுத்துக்கள் தெக்கன் மலையாளம், நானாமோணம் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டன.



இவ்வகை எழுத்துக்களில் ஒன்றான கேலெழுத்துக்கள் உபயோகித்தவர்கள் தென் இந்தியாவின் மலைப்பிரதேச இஸ்லாமியர்களே ஆவர். வட்டெழுத்துக்கள் எனக் குறிப்பிடப்பட்ட எழுத்துக்கள் உருமாறி 11 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் லிபியே வழங்கி வந்தது. இந்த வட்டெழுத்துக்களில் இருந்தே உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றின.




## பிரதட்சணம் மற்றும் அப்பிரதட்சணம்

தென்னாட்டு எழுத்துக்கள் பெரும்பாலும் இடது புறத்தில் இருந்து வலது புலமாகச் செல்லும் ஒரே கோட்டால்ஆனவை. இவ்வாறு ஒரே கோட்டால் எழுதப்படும் எழுத்துக்களையே, பிரதட்சணம் மற்றும் அப்பிரதட்சணம் என இரு வகைப்படுத்தினர்.



கைவழி வட்டமாகச் செல்லும் விதத்தில் எழுதப்படும் எழுத்துக்கள் 'பிரதட்சண' எழுத்துக்கள் எனவும் எதிர்ப்புறமாக எழுதப்படும் எழுத்துக்கள் 'அப்பிரதட்சண' வகை எழுத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. கிரந்தமும் தமிழும் இவ்வகையான எழுத்துக்களே.

புராதன காலத்தில் பாறைகள், விலங்குகளின் தோல், பனை ஓலைச்சுவடிகள் போன்றவற்றில் கூரிய எழுத்தாணிகள் கொண்டு எழுதப்பட்டு வந்த எழுத்துக்கள் பிற்காலத்தில் கடதாசி போன்ற மெல்லிய பொருளில் எழுதுமளவிற்கு வளர்ச்சி பெற்றது. தற்போதைய அதிநவீன வளர்ச்சி



முறைகளுக்கு அமைய, எழுத்துக்கள் கணினி விசையைத் தட்டியவுடனேயே, அச்சடிக்கும் அளவிற்கு முன்னேறி விட்டது.

தற்போது தமிழில் எழுதப்பட்டு வரும் பெரியார் சீர்திருத்த எழுத்தமைப்பு 1978 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்பின், சில வருடங்கள் கழித்தே இலங்கையில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

-ஜெய்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றலை விருப்பத்துடன் மேற்கொள்ள வேண்டும்

எனவே, மாணவர்கள் கற்கும் பாடத்தில் முதலில் விருப்பம்கொள்ள வேண்டும். பின்னர், அதனைக் கற்க வேண்டும் என்ற ஊக்கம் அவர்களுக்கு இருக்க வேண்டும். இவ்விரண்டும் இருந்தால்தான், சிறப்பாகக் கற்க முடியும்.

உதாரணமாக: ஒரு மாணவருக்கு கணித பாடம் கடினமாக இருந்தால், அந்தப் பாட



*'விருப்பு' என்பதை மையமாக வைத்து எமக்குத் தேவையானதை நாம் இலகுவாக நுகர்ந்து கொள்ள முடியும். ஆகவே, நாம் எதை அடைவதாக இருந்தாலும் அது தொடர்பில் விருப்பத்தோடு கருமமாற்ற வேண்டும். அந்த விருப்பின் அடிப்படையிலேயே, எமது கல்வி நடவடிக்கையும் அமைய வேண்டும். அப்போதுதான் எமது கல்வி நடவடிக்கையும் சிறப்பாக நடைபெறும்*

## கல்வி

## முகாமைத்துவம் - 95

### கற்றலுக்கான ஆலோசனைகள்

ஆசிரியரை விரும்பாத நிலையும் அந்தப் பாடத்தைக் கற்க முடியாத அசாதாரண சூழ்நிலையும் அவரிடத்தில் ஏற்படக்கூடும். அந்தவகையில், குறித்த பாடத்தில் ஆரம்பத்திலேயே காணப்படும் கவனக் குறைவு. அப்பாடத்தைக் கற்பதில் ஏற்படும் மந்தநிலை, அப்பாடத்தை மென்மேலும் கற்காமை போன்ற காரணங்களே, அந்தப் பாடத்தில் இவ்வாறான விருப்பமின்மை ஏற்படக் காரணமாக அமைகின்றன.

அத்துடன், எந்தவொரு பாடத்தையும் விருப்பு, வெறுப்பின் அடிப்படையில் பாகுபடுத்தக்கூடாது. அவ்வாறு பாகுபடுத்திக் கற்கும்போதுதான், குறிப்பிட்ட சில பாடங்களைக் கற்கும் திறன் இருந்தும் அதனை வெளிக் கொண்டுவந்து கற்க முடியாமை, புள்ளிகள் குறைவாக எடுத்தல், தேடலில் விருப்பக் குறைவு போன்ற தடைகள் மாணவர்களைச் சூழ்ந்துகொள்கின்றன.



மாணவர்களது பொதுவான முரண்பாடாக, இன்று முன்நிற்பது, குறிப்பிட்ட பாடத்தில் அல்லது ஆசிரியரில் காணப்படும் வெறுப்பு நிலையே ஆகும். அந்தவகையில், மாணவர்கள் சில பாடங்களைக் கற்பதற்கும் கற்பிப்பதை செவிமடுப்பதற்கும் அக்கறை காட்டுவதில்லை. எனினும், இதற்கான பிரதான காரணம், பாடமோ அல்லது ஆசிரியரோ அல்ல. மாறாக, மாணவர்களது எண்ணம்தான் இதற்கு மூலகாரணமாக அமைந்துவிடுகின்றது.



பாடங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் முழுவதுமே பயனுடையதும் இலகுவானதுமேயாகும். ஆனால், அதனை மாணவர்கள் கற்றுக்கொள்வதில் காட்டும் விருப்பமின்மைதான், அவர்கள் பல விடயங்களை அறிந்துகொள்ளவும் கற்றுக் கொள்ளவும் தடையாக அமைந்துவிடுகிறது.

சிலவேளைகளில் மாணவர்களாகிய உங்களுக்கு குறிப்பிட்ட பாடமொன்றில் ஈடுபாடு குறைந்தால், அதற்கான காரணங்களை உணர்ந்துகொள்ளுங்கள். குறிப்பிட்ட பாடத்தை விளங்குவதில் சிக்கல்நிலை ஏதும் இருந்தால், ஆசிரியரின் உதவியுடன் அதை நிவர்த்தி செய்துகொள்ளுங்கள் அல்லது குறிப்பிட்ட பாடத்தைக் கற்பதற்கு ஒதுக்கும் நேரத்தை அதிகரித்துக்கொள்ளுங்கள். இவற்றினூடாக, அப்பாடத்தை விளங்கிக்கொள்வது இலகுவாக அமையும்.



ஆகவே, பாடத்தைக் கற்பதில் பாகுபாடு காட்டாமல் பாடங்களைக் கற்பதில் சமநிலைத் தன்மையைப் பேணி, ஆசிரியரோடு நட்புறவுடன் கல்வி கற்க வேண்டும். இதன்மூலம் அறிவை வளர்த்து, பரீட்சையையும் இலகுவாக்கிக்கொள்ள முடியும். (தொடரும்)

**எம்.ஏ.எஃப். [illegible]**

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவியான ஆயிஷா ஷஹானி, 177 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆசாத்-சித்தி மசீன் தம்பதியரின் புதல்வியாவார்.



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவனான ஏ.ஹிமான், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவியான எஃப்.ரஷீதா, 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரிஸான் முஹம்மத்-பதுருல் காமிலா தம்பதியரின் புதல்வியாவார்.



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவனான எம்.அஸ்ஸாம், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/ஜப்பார் மத்திய கல்லூரி மாணவனான எம்.ரிப்கான், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



தி/அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சிகான், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நசீர்-ஜெசீலா தம்பதியரின் புதல்வராவார்.



க/ஜப்பார் மத்திய கல்லூரி மாணவியான எஸ்.ஸஹ்ரா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/மீரா மத்திய கல்லூரி மாணவனான எம்.என்.அதீஃப், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நாஸிர் அலி, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/ஜப்பார் மத்திய கல்லூரி மாணவனாவார்.



சிம்தா சிரோமி, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியாவார்.



ஏ.சி.பெனூரஷா, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியாவார்.



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியான நஷ்ஹத் காத்தூன், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அலானி அஹமட், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவனாவார்.



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவனான ஜாத் இஸ்மாயில், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

# மனித உடல் பற்றி சுருக்கமாக...

- மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.
- மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு செம்பு உண்டு.
- நுரையீரல் ஒருநாளைக்கு 23,040 தடவைகள் சுவாசிக்கின்றது.
- நமது இருதயம் ஒரு நாளில் 103,689 முறைகள் துடிக்கின்றது.
- மனித நாக்கில் உள்ள சுவை அறியும் செல்கள் 3 ஆயிரம் ஆகும்.
- கைரேகையைப் போல நாக்கில் உள்ள ரேகைகளும் ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும்.
- நமது உடலுக்குத் தேவையான ஒக்சிஜனின் அளவில் கால்வாசி அளவு ஒக்சிஜன் மூளையின் இயக்கத்திற்குப் பயன்படுகிறது.
- உடலின் மிகச் சிறிய எலும்பு நடுக் காதுப் பகுதியிலேயே அமைந்துள்ளது.
- எமது உடலின் வலது பக்கமானது, எமது மூளையின் இடது பக்கத்தினாலும் எமது உடலின் இடது பக்கமானது எமது மூளையின் வலது பக்கத்தினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.



- நாம் உட்கொண்ட உணவு முழுமையாக சமிபாடடைவதற்கு 12 மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன.

- பாத்திமா பஸ்னா,
மெதடிஸ்ட் மகளிர் கல்.,திருகோணமலை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடலில் மறைந்திருந்து தாக்

*மனிதனுக்கு நோய்களை உருவாக்கும் கிருமிகள் ஓர் உயிரினத்தில் உருவாகி, வளர்ந்து, போஷிப்படைந்து வாழும் மற்றுமொரு உயிரினமாகவே காணப்படுகின்றது. இத்தகைய நோய்க்கிருமிகள் மனித ஆரோக்கியத்திற்கு மிகப்பெரிய சவாலாகவே உள்ளன. அந்தக் கிருமிகள் சிலவற்றால் பல்வேறு நோய்கள் எமக்கு ஏற்படுவதுடன், இத்தகைய நோய்களில் இருந்து அனைவரும் பாதுகாப்புப் பெறுவதும் அவசியமாகின்றது. இதுபற்றிய தகவல்களே கீழே தரப்பட்டுள்ளன*

## எமீபயசிஸ் நோய்

புரோட்டோசோவா வகையைச் சார்ந்த என்டமீபா ஹிஸ்டோலிகா எனும் மருத்துவப் பெயரினால் அழைக்கப்படுகின்ற இத்தகைய கிருமியாலேயே




இந்த நோய் ஏற்படுகின்றது. இக்கிருமிகள் நோயாளியின் உடலுக்குள் சினை முட்டைகளை இட்டு, இந்த சினை முட்டைகள் மலத்துடன் வெளியேறுகின்றன. இதற்கு வலுவான கோது இருப்பதால் இவை நீண்ட நாட்கள் எந்தச் சூழலிலும் வாழும் தன்மை கொண்டவை. அத்தகைய மலம் கழிவு நீரால் உணவோடும் நீரோடும் உடலுக்குள் செல்கையில் 'என்டமீபா ஹிஸ்டோலிகா' எனும் கிருமி உற்பத்தியாகின்றது. இதனால் உண்டாவதுதான் எமீபயசிஸ் எனும் நோயாகும். இதன் நோய் அறிகுறியாக உடல்வலி, மலத்துடன் இரத்தமும் சீழும் வெளியேறுதல் ஆகியவை ஏற்படுகின்றன. அத்தோடு, இக்கிருமி குருதியின் வழியாகச்சென்று ஈரல், மூளை, நுரையீரல் ஆகியவற்றுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு, ஈரலில் புகுந்து கட்டிகளையும் உருவாக்குகின்றன.





## பெலன்டிடயசிஸ் நோய்



புரோட்டோசோவா எனும் இக்கிருமி பெலன்டிடியம் கொலி எனும் மருத்துவப் பெயரால் குறிப்பிடப்படுகின்றது. நோயாளியின் உடலிலுள்ள இதன் சினை முட்டைகள் மலத்துடன் வெளியேறி நோய்த்தொற்றை ஏற்படுத்துகின்றன. காலைக்கடன் முடித்த பின்னர் முறைப்படி கைகளைச் சவர்க்காரம் இட்டு சுத்தம் செய்யாமல் விடுவதன்மூலம் கையில் காணப்படும் நோய்க்கிருமிகள் உடலுக்குள் சென்று பெலன்டிடயசிஸ் எனும் இந்நோயை உண்டாக்குகின்றது. அநேகமாக இதன் நோய் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. எனினும், சிலவேளை, வயிற்றோட்டம், இரத்தப் போக்கு, உடல்வலி, நிறை குறைவு என்பன ஏற்படலாம்.

## ஜியாடியாசிஸ் நோய்

மருத்துவ ரீதியில் 'ஜியாடியா இன்டெஸ்டைனேலிஸ்' என அழைக்கப்படும் கிருமியால் இந்த நோய் உண்டாகின்றது. நோயாளியின் உடலில் இது சினை முட்டைகளை உருவாக்கி மலத்துடன் வெளியேறுகின்றது. கைகளைச் சுத்தமாக சவர்க்காரமிட்டு கழுவாவிடின், உணவு அல்லது நீரின் மூலம் எமது உடலுக்குள் இக்கிருமிகள் சென்றுவிடுகின்றன. சிறுகுடல் வழியாக வேகமாகப் பரவலடையும். இவை வயிற்றுப் போக்கு, வாந்திபேதி, உடல்வலி வயிற்று வீக்கம், வாந்தி ஆகிய நோய்களை ஏற்படுத்துகின்றது. இதற்கு முறைப்படி சிகிச்சை அளிக்காவிடின், உடல் வலுவிழந்து போகலாம்.





## ஃபெசியோலயசிஸ் நோய்

'அக்மா பெதெல்லா' எனும் கிருமியால் இந்த நோய் ஏற்படுகின்றது. சில உயிரினங்களின் பித்த நாளங்களில் இருக்கும் இதன் சினை முட்டைகள் பித்தச் சுரப்பிகள்மூலம் பெருங்குடலில் சேர்ந்து மலத்துடன் வெளியேறி சூழலுடன் கலந்து விடுகின்றன. அதனால், அசுத்தமடையும் நீர் மற்றும் உணவினால் இக்கிருமி உடலுக்குள் சென்று, பின்னர் சிறுகுடலில் வளர்ச்சி அடைந்து நாளங்களுக்குள்ளும் நுழைந்துவிடும். இதன் காரணமாக உடலில் வலி, உடல் வீக்கம், காய்ச்சல், வாந்தி, சொறிச்சல் ஆகியன ஏற்படும். இக்கிருமி பித்தநாளத்தில் சேர்வதால் மேலதிக தாக்கமாக காய்ச்சல், செங்கமாலை, தொடர்வலி ஆகிய உபாதைகளும் ஏற்படும்.





## ஷிஸ்டொசோமயசிஸ்

இந்த நோயை மூவகைக் கிருமிகள் உண்டாக்குகின்றன. அவற்றை ஷிஸ்டசோமா ஹிமெடொபியம், ஷிஸ்டசோமா ஜாபொனிகம், ஷிஸ்டசோமா மெயோனி எனக் கூறலாம். இத்தகைய நோயாளியின் மலத்துடனும் சிறுநீருடனும் மேற்படி கிருமிகள் முட்டைகள் சூழ லோடு கலக்கின்றன. அவை இசைவாக்கமடைந்ததும் நத்தையின் உடலுக்குள் புகுந்து நீர்ப்பசையா[illegible]இல் பரவியிருக்கும். இ[illegible] நீரின் மூலம் எமது சருமத்தைத் துளைத்துக்கொண்டு எமது உடலுக்குள் புகுந்து இரத்த நாளங்களுக்குள் சென்றுவிடுகின்றன. எனினும், ஆரம்பத்தில் இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்படுவதில்லை. சில வேளைகளில் காய்ச்சல், இருமல், உடல்வலி, வயிற்றோட்டம், உடல் வீக்கம் ஆகியவை ஏற்படலாம். காலம் கடந்த நோயானால் மலத்துடனும் சிறுநீருடனும் குருதி வெளியேறும், சிறுநீரகப்புற்றும் ஏற்படலாம். எனினும் அது அரிதாகவே நிகழ்கின்றது.





## கொக்கிப்புழு



கொக்கி[illegible] புழுக்கள் [illegible] வகைப்படும். என்கைலோஸ்டோமாடு டோடிணாலே மற்றும் நெகாட்டோ எமெரிகானுஸ் எனும் மருத்துவப் பெயர்களால் இவை அழைக்கப்படுகின்றன. மிருகங்களில் இருந்து மனிதர்களுக்கு இந்த நோய் தொற்றும் வாய்ப்புகள் உள்ளன. நோயாளியின் சிறுகுடலிலிருக்கும் கொக்கிப்புழுக்கள் இடும் முட்டைகள் மலத்துடன் வெளியேறி, அதிலிருந்து வெளியாகும் குஞ்சுகள் எமது தோலைத் துளைத்துக் கொண்டு உடலில் நுழைகின்றன. தொடர்ச்சியாக இவை நெஞ்சுக்கூட்டுக்குள் சென்று இதயத்துக்கும் நுரையீரலுக்கும் செல்கின்றன. பின்னர் சுவாசக்குழாய் வழியாக இரைப்பைக்கும் பெருங்குடலுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம் நோய்க்கிருமிகள்



சென்று இறுதியாகச் சிறுகுடலை அடைகின்றன. அங்கே தொங்கிய நிலையில் அவை குருதியை உறிஞ்சிக் குடித்துப் பெரிதாக வளரும். இதனால் பாதிக்கப்படுவோருக்கு இரத்தசோகை ஏற்படலாம். அவ்வாறே, உடல்வலியும் ஏற்படும். அது மட்டு மல்ல; குஞ்சுப் புழுக்கள் தோலைத் துளைத்துக் கொண்டு நுழையும் பகுதிகளில் சொறிகள் காணப் படும். அவை நுரையீரலைத் துளைத்தால் இருமல், மூச்சுத்திணறல் மற்றும் இளைப்பு ஆகியவையும் ஏற்படலாம். எனினும், இவ்வாறான நோய் அறிகுறிகள் இன்றியும் மனித உடலில் கொக்கிப் புழுக்கள் இருக்கலாம்.

## பாற்புழு நோய்


மருத்துவ ரீதியில் 'என்டரோபியஸ் வர்மிகியு லாரிஸ்' என்று இந்த நோய் அழைக்கப்படுகின்றது. நோ[illegible]ளியின் பெருங்குடலில் காணப்படும் பாற் புழுக்கள் இரவில் மலவா யிலால் வெளி யேறி முட்டை யிடுவதால், மல வாயிலில் சொறி மற்றும் அரிப்பு நிலை ஏற்படும். இத்தகைய நிலையில் அவை கைகளால் தொடுகையுறும் போது உணவு மற்றும் நீரின் மூலம் வாய் வழியாக உடலுக்குள் சென்று விடுகின்றன. இத்த கைய செயற்பாடுகள்மூலம் அல்லாமல் படுக்கை விரிப்பு, துவாய் ஆகியவற்றிலும் பாற்புழு முட் டைகள் படிந்திருக்கும். அந்தவகையில் இந்நோய் ஏனையவர்களுக்கும் விரைந்து பரவும். அத்தோடு, சிறுகுடலிலிருந்து முட்டையாக வெளிப்படும் பாற்புழு பெருங்குடலுக்குச் சென்று அங்கு பல் கிப் பெருகும். இது புழுவா க வளர்ச்சியடைவதற்கு ஒரு மாதம் வரை செல்லும். அதன் ஆயுட்காலம் இரு மா தங்களாகும். எமது வாய்வழி யாக பாற்புழுக்க ளின் முட்டைகள் அடிக்கடி உடலுக்குட் செல்லும்நிலை இருப்ப தால் இந்நோய் எந்நேர மும் எமக்கு ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. இதன் நோய் அறிகுறி யாக, மலவாயிலில் ஏற் படும் கடுமையான சொ றிவே இதன் பிரதான அடையாளமாகும். அத்து டன், உடல்வலி உணவில் வெறுப்பு ஆகியவை யும் ஏற்படலாம்.





## மலேரியா

ப்ளஸ்மோடியம் பல்சிபாரும், ப்ளஸ் மோடியம் வைவெக்ஸ், ப்ளஸ் மோடியம் ஓவாலே எனும் மூவகைக் கிருமிகளாலேயே மலேரியா நோய் ஏற்படுகின் றது. இந்நோய் 'எனோ பீலிஸ்' எனும் பெண் நுளம்புகளாலேயே பரவுகின்றன. அவை மலேரியா நோயாளியைக் கடிப்பதன்மூலம் கிருமிகளை உள்வாங்கிக்கொண்டு ஒரு சுகதேகி யைக் கடிக்கையில் அதன் எச்சிலூடாக அக்கிருமி கள் அவரது உடலுக்குள் சென்றுவிடுகின்றன. பின்னர் உடலில் வளர்ச்சியடைந்து நெஞ்சுக்கூட் டை வந்தடைகின்றன. அதன்பின்னரே, நோயின் அறிகுறிகள் தென்படும். இதன் நோய் அறிகுறி யாக நடுக்கம் தரும் குளிருடன்கூடிய கடுமை யான காய்ச்சல், தலைவலி, நெஞ்சுவலி, வாந்தி, கைகால் வீக்கம், தலைச்சுற்று என்பன ஏற்படுகின் றன. இக்கிருமிகள் மூளையை அதிகம் பாதிப்ப தால் மூளைக்காய்ச்சலும் ஏற்படலாம். இந்த நிலை மிகவும் ஆபத்தானதாகும். இது 'மூளை மலேரியா' என அழைக்கப்படுகிறது.





## யானைக்கால் நோய்

'வுவஹேரியா பென் கிராப்ட்' எனும் மருத்துவப் பெயரால் குறிப்பிடப்படும் ஒருவகைக் கிருமியா லேயே இந் நோய் உண் டாகிறது. பொதுவாக, இதை 'பரவாப்புழு' என்றும் கூறப்படுகின்றது. 'கியுலெக்ஸ்' எனும் இனத்தைச் சேர்ந்த நுளம்பாலேயே இக்கிருமி காவிச் செல்லப்பட்டு பரவுகின்றது. இது அதிகமாக இரவு நேரத்திலேயே கடிக்கின் றது. இது ஒருவரின் குருதியை உறிஞ்சும் போது அவரது உடலில் பரவாப்புழுக் கிருமிகள் இருக்குமாயின், அவை குருதி வழியாக நுளம்பின் உடலுக்குள் புகுந்துவிடும். அத்தகைய நுளம்பு சுகதேகி ஒருவரின் குருதியை உறிஞ்சு மாயின், அவரது உடலுக்குள் ளும் இக்கிருமிகள் நுழைந்து விடுகின்றன. பின்னர் இவை 6 முதல் 18 மாதங்களுக் குள் பெரிய புழுக்களாகி விடும். 2.50 சென்ரிமீற்றர் அளவு வளர்ச்சி அடை யும் அதன் ஆயுள் 10 முதல் 15 ஆண்டுகளாகும். இந்நோய்த் தொற்று ஏற்பட்டு மூன்று மாதங்களில் காய்ச்சல், இருமல், பருமன் குறைவு, கைகால் வீக் கம் என்பன ஏற்படுகின்றன. இதற்குரிய சிகிச்சை களைப் பெறத்தவறின், நீண்டகாலங்களின் பின் னர் நரம்புகள் அடைத்து பல உறுப்புக்கள் பாரிய அளவில் வீங்கி அவலட்சணத் தோற்றம் பெறும். இது அந்தந்த உறுப்புக்களில் அந்த கிருமிகளின் தாக்கத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்.





## சொறி

'சாப்கோட்ஸ் ஸ்கெப்' எனும் மருத்து வப் பெயரால் குறிப்பிடப்படும் கிருமி களாலேயே சொறி ஏற்படுகின்றது. இது எளிதாகத் தொற்றக்கூடி யது. இதன் கிருமிகள் தோலைத் துளைத்துக் கொண்டு சென்றபின் னர் துவாரங்களில் முட்டையிடும். 2 முதல் 8 நாட்களுக்குள் முட்டை யிலிருந்து குஞ்சு வெளியாகும். அதன் வளர்ச் சியோடு தோலில் சிறு சிறு செந்நிறத் தழும்புகள் தோன்றி அவற்றை இலேசாகச் சொறிகையில் கொப்புளம் உடைந்து புண்ணாகின்றது. இதையே சொறி என்கின்றோம். பெரும்பாலும் இது உள்ளங் கை, புறங்கை மற்றும் விரல் இடுக்கு ஆகி யவற்றில் மட்டுமல்ல; மணிக்கட்டு உடல் வளை வுகள் இனப்பெருக்க உறுப்புக்கள் ஆகியவற்றி லும் உண்டாகும். ஒருவருக்கொருவர் தொடுகை யுறும்போதும் இந்நோய்த் தொற்று ஏற்படுகிறது.





## பேன் ஏற்படுத்தும் காயங்கள்

சீப்பு, தொப்பி, தலையணை, படுக்கை விரிப்பு, கட்டில் மெத்தை ஆகியவற்றால் பேன் தொற்று ஏற்படு கிறது. பொடுகு எனும் பேன் முட்டை மஞ்சள் அல்லது வெள்ளை நிறங் களில் இருக்கும். இவை முடியின் அடியிலேயே இருக்கின்றன. முட்டை உடைந்து வெளியே வரும் சிறு பேன்கள் 'கடுஅல்மா' என்று அழைக்கப்படுகிறது. அவை 7 நாட்களில் பெரிதாகிவிடும். பெண் பேன் நாளொன்றுக்கு 8 முட்டைகளை இடும். அதன் ஆயுட்காலம் 30 நாட்களாகும். பேன் எமது குருதியை உறிஞ் சியே வாழ்கின் றது. இதன்போது, தலையில் சொறிவு ஏற்படு கின்றது. இதுவே நாட்பட புண்களை யும் ஏற்படுத்தும்.





## வட்டப்புழு

வட்டப்புழுவின் மருத்துவப் பெயர் 'அஸ்கரிஸ் லும்ப்ரிகோயிடிஸ்' ஆகும். வட்டப்புழுவின் பெண் இனமானது, நாளொன்றிற்கு 2400 சினை முட்டை களை இடுகின்றது. இந்த சினை முட் டைகள் மலத்துடன் வெளியேறுகின் றன. இவை அசுத்தமடையும் நீர் மற்றும் உணவுகளை உட்கொள்வதன்மூலம் எமது உடலுக்கும் சென்றுவிடுகின்றன. இவ்வாறு உடம்பினுள் செல்கின்ற சினை முட்டைகளிலிருந்து வெளிவரு கின்ற வட்டப்புழுக்கள் சிறுகுடற் பகுதி யில் துளைகளை ஏற்படுத்தி அதன் வழியே வெளியேறி குருதியில் கலந்து விடுகின்றன. பின்னர் நுரையீரலுக்குள் நுழையும் இக்கிருமிகள் ஒரு வாரம் அல்லது இரு வாரங்களின் பின்னர் புழுவாக மாறி 1-2 வருடங்கள் வரை வாழும். சிறு குடலில் வட்டப் புழுக்கள் ஏராளமாக நிறைந்தால் சிறு குடல் அடைப்பும் ஏற்படலாம். சிலவேளை, வட்டப்புழுக்கள் சிறுகுடலின் உச்சிக்குச் சென்று நுரையீரலுக்குள் நுழையலாம். அதன்போது, மூக்குத்துவாரங்கள் மற்றும் வாய் வழியாகவோ வட்டப் புழுக்கள் வெளியே வரலாம். நீண்ட கால நோய்த்தாக்கத்தால் மந்த போஷணையும் ஏற்படலாம்.

## கிருமிகளிடமிருந்து பாதுகாப்புப் பெற...

கழிவறைக்குச் சென்று வந்த பின்ன ரும் உணவு உட்கொள்வதற்கு முன்ன ரும் கைகளை சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவவேண்டும். சுட்டு ஆறிய நீரைப் பருகவேண்டும். பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை நன்றாகக் கழுவிய பின் உட்கொள்ளவேண்டும். தலையணை உறை, படுக்கை விரிப்பு, துவாய் என்ப னவற்றை வாரமொரு முறையேனும் சுத்தப்படுத்த வேண்டும். உடல் சுத்த மும் அவசியம் பேணப்படல் வேண் டும்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைநகரின் ஒரு பகுதி

# கிறீஸ்





**அரசு:** நாடாளுமன்றக் குடியரசு.
**சுதந்திரம்:** ஒட்டோமன் பேரரசிடமிருந்து - பிரகடனம் 1822 ஜனவரி 1; நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பு 1975 ஜூன் 11.
**தேசிய பெயர்:** எலிநிக்கி டிமோக்ரெட்டியா.
**ஜனாதிபதி** (2005): கரோலொஸ் பபோலியாஸ்.
**பிரதமர்** (2011): லூக்கஸ் பபாடிமொஸ்.

## புவியியல்

தென் கிழக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள கிறீஸ் நாட்டின் முக்கிய நிலப்பரப்பு மத்தியதரைக் கடலில் மிக நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இதன் வடக்கில் அல்பேனியா, யுகொஸ்லேவியா ஆகிய நாடுகளும் கிழக்கில் துருக்கியும் எல்லைகளாக அமைந்துள்ளன. சுமார் 1,500 தீவுகளை தன்னகத்தேகொண்ட நாடாக கிறீஸ் காணப்படுகின்றது. ஐரோப்பாவில் அதிக மலைகளைக்கொண்ட நாடாகவும் கிறீஸ் திகழ்கின்றது. டசன் கணக்கான வளைகுடாக்கள் காணப்படுகின்றன. இந்நாடு பழமையான எரிமலைகளின் இருப்பிடமாகும். அச்சிலூஸ், அலிக்மன், எவ்ரோஸ், பினியோஸ் உள்ளிட்ட பல ஆறுகள் இங்கு பாய்கின்றன. வெகோடிஸ், வொல்வி போன்ற ஏரிகளும் உள்ளன.

**மொத்தப் பரப்பு:** 50, 942 ச.மைல் (131,940 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 50,502 ச.மைல் (130,800 ச.கி.மீற்றர்).



எதென்ஸ் பல்கலைக்கழகம்

**நிலப்பிரிவுகள்:** 13 நிர்வாகப் பிரிவுகள்.
**தலைநகரம்:** எதென்ஸ்.
**ஏனைய பெரிய நகரம்:** தெஸ்ஸலோனிக்கி.
**உயர் மலைச்சிகரம்:** ஒலிம்பஸ் மலை (2,918 மீற்றர்).
**தாழ்மையம்:** மத்தியதரைக் கடல்.
**சனத்தொகை** (2011): 10,760,136.
**நாணயம்:** யூரோ (முன்னர் ட்ரச்மா).
**மொழிகள்:** கிரேக்கம் 99% (அலுவலக மொழி), ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச்.
**இனக்குழுவினர்கள்:** கிறீக் 98%, ஏனையோர் 2%.
**சமயங்கள்:** கிரேக்க ஓர்த்தடொக்ஸ் கிறிஸ்தவம் 98%, இஸ்லாம் 1.3%, ஏனையவை 7%.
**எழுத்தறிவு** (2003): 98%

**இணையத்தளக் குறியீடு:** .gr
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 30
**தேசிய கீதம்**
Se gnorízo apó tin kópsi
tou spathioú tin tromerí,
se gnorízo apó tin ópsi,
pou me via metrái ti gi.... என
ஆரம்பமாகின்றது.

## வரலாறு


பிரதமர்


ஜனாதிபதி

மைசீனியர்கள் உள்ளிட்ட இந்தோ-யூரோ மக்கள் கி.மு. 2000 ஆம் ஆண்டளவில் கிறீஸில் குடியேறினர். கி.மு. 1200 ஆம் ஆண்டளவில் டோரியர் எனும் மற்றோர் இந்தோ-யூரோ குழுவினர் கிறீஸைக் கைப்பற்றியதை அடுத்து, இங்கு இருண்ட யுகம் ஆரம்பமாகியது. இந்த இருண்ட யுகத்தின் இறுதிக் கட்டமாகிய கி.மு. 750 ஆம் ஆண்டின் பின்னர் கலை, இலக்கியம், வர்த்தகம், அரசியல், தத்துவம் என பல்வேறு துறைகளில் வியத்தகு வளர்ச்சி அடைந்து வளம்பொருந்திய நாடாக மாறியது.

கி.மு. 431-403 வரை நடந்த பிலோபொனேசியன் யுத்தத்தால் நாடு பெரிதும் பலவீனமடைய, 2ஆம் பிலிப் மற்றும் அவரது மகன் ஆகியோர் மசிடோனியாவின் மகா அலெக்சாண்டரினால் கைது செய்யப்பட்டதையடுத்து, கிரேக்கம் என்றும் கிரேக்கர்கள் என்ற அடையாளமும் நிலைநாட்டப்பட்டது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பரிசுத்த ரோமானிய பேரரசால் கைப்பற்றப்பட்டது.

பின்னர் 1460 இல் ஒட்டோமன் பேரரசின் கீழ் வந்தது. 1821 இல் கிரேக்க சுதந்திரத்திற்கான யுத்தம் ஆரம்பமானது. 1822 இல் சுதந்திரப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டு 1827 இல் ஒட்டோமன் பேரரசில் இருந்து சுதந்திரம் பெற்றது. இரண்டாம் உலகப் போரின்போது, ஜேர்மனின் பிடியில் சிக்கியது. 1967 இல் ராணுவப் புரட்சியில் மன்னர் கொன்ஸ்தாந்தின் நாட்டைவிட்டு ஓடினார். 1974 இல் மன்னராட்சி முடிவுக்கு வந்து, 1995 இற்குப் பின்னர் குடியரசானது.


தேசிய இலச்சினை

## கலாசாரம்

கிரேக்கத்தில் ஆரம்பத்தில் பாரம்பரிய கிரேக்க கலாசாரம் நிலவியபோதும், பிற்காலத்தில் பரிசுத்த ரோமானிய பேரரசின் தாக்கமும் பைசாந்திய பேரரசின் செல்வாக்கும் கிரேக்க நாட்டின் கலாசாரத்தை நிர்ணயித்தன. பின்னர் ஒட்டோமன் பேரரசு, வெனீஷிய குடியரசு, ஜெனோயிஸ் குடியரசு, பிரிட்டிஷ் குடியரசு என்பன நவீன கிரேக்க நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்தின. எனினும், சுதந்திரத்திற்கான கிரேக்க யுத்தமானது அவர்களின் பன்முக கலாசாரத்தைப் பின்தள்ளி பாரம்பரிய கலாசாரத்தை மீண்டும் நிலைநிறுத்தியது.


டெல்ஃபி அரங்கம்

## காலநிலை

கிரேக்க நாட்டின் காலநிலையானது, மத்திய தரைக் கடல் காலநிலையைச் சார்ந்ததாகும். மிதமானதும் உலர்ந்ததும் கோடைகாலம் பிரகாசமான சூரியஒளியும் கொண்டதாக காணப்படுகின்றது. மாரிகாலம் குளிர் நிறைந்ததாகவும் 'மெல்டிமி' என்ற காற்றின் செல்வாக்கால் சிறிது மழைவீழ்ச்சியும் காணப்படுகின்றது.




கிறீஸ் தேசிய நூலகம்


ஒலிம்பியன் சியஸ் ஆலயம்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2009): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 5.93 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள் : 13.295 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2007): 1,500. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2007): 150. **இணையத்தள வழங்குனர்கள்** (2010): 2.574 ; இணையத்தள பாவனையாளர்கள்: 4.971 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2009): மொத்தம் 2,548 கி.மீற்றர்.


கிறீஸ் நாடாளுமன்றம்


பிரேயஸ் துறைமுகம் (கிறீஸின் பெரிய துறைமுகம்)

**பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 117,533 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2007) : 6 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** அகியோ தியோடொரை, அஸ்பிரோபைகோஸ், இரக்லியோன், பச்சி, பிரேயஸ், தெரஸ்ஸலொனிக்கி. **விமான நிலையங்கள்** (2010): 81.


பார்தியன்

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 20.45%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள்,


கொரித் கால்வாய்


பீட், ஒலிவ், உருளைக்கிழங்கு, தக்காளி, திராட்சை, புகையிலை, மாட்டிறைச்சி, பாற்பண்ணை உற்பத்திகள். **கைத்தொழில்கள்:** உல்லாசப் பயணத்துறை, உணவு மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்கள், புடவை, ரசாயனப் பொருட்கள், பெற்றோலியம். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், பளிங்கு, உப்பு. **ஏற்றுமதிகள்** (2010): உணவும் பானவகைகளும், பெற்றோலிய உற்பத்திகள், ரசாயனப் பொருட்கள், புடவை. **இறக்குமதிகள்** (2010): இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஜேர்மனி, இத்தாலி, சீனா, ஐக்கிய ராச்சியம், சைப்ரஸ், துருக்கி, பிரான்ஸ், நெதர்லாந்து, ரஷ்யா, தென் கொரியா, ஸ்பெய்ன்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- பார்தியன்
- டெல்ஃபி அரங்கம்
- ஒலிம்பியன் சியஸ் ஆலயம்
- தேசிய தொல்பொருளியல் நூதனசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திரப் பறவையான 'கொம்பு மூக்கன்'



**உலகிலுள்ள விசித்திரமான பறவைகளில் கொம்பு மூக்கனும் ஒன்றாகும். இதன் தோற்றம் மாத்திரமல்ல; வாழ்க்கை முறையும் ஏனைய பறவைகளோடு, ஒப்பிடுகையில் மாறுபட்டவையே. ஆங்கிலத்தில் 'ஹோன்பில்' (Hornbill) என அழைக்கப்படும் இப்பறவையை தமிழில் 'இருஅலகுக்குருவி' மற்றும் 'மலைமொங்கான்' என்றும் அழைப்பர்**

## பெரிய அலகு

கொம்பு மூக்கனின் அலகு மிகப்பெரியது. கோடரி போன்றது. சுமார் 45 சென்ரிமீற்றர் நீளமுடையது. இதன் அலகு பார்ப்பதற்கு எருதின் கொம்பு போன்று காட்சியளிக்கும். இதனாலேயே, இதற்கு 'கொம்பு மூக்கன்' என்ற பெயர் வந்தது.கொம்பு மூக்கன் பறவைகள் உலகில் சுமார் 1.5 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்தப் பறவைகளில் சுமார் 54 வகைகள் இருக்கின்றன. உருவ அமைப்பிலும் அலகு அமைப்பிலும் இவை ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன.

கொம்பு மூக்கன் பறவையின் மேல் அலகின் உச்சியில் இன்னுமொரு அலகு போன்ற உட்கூடான அமைப்பு ஒன்று இருக்கும். இது தலை எலும்புடன் சேர்ந்திருக்கும்.இத்தகைய அமைப்பு இதற்கு பெரும் சத்தம் எடுத்து கத்தும் வாய்ப்பை வழங்கியுள்ளது. கொம்பு மூக்கன் கத்தும் சத்தம் காட்டில் சுமார் 3 கிலோமீற்றர் தூரம் வரை பலமாகக் கேட்கும்.

## உணவுப் பழக்கம்

இது தனது இரையாக ஓணான், பல்லி, பூச்சிபுழுக்கள், தேள், பூரான், வௌவால் மற்றும் ஏனைய பறவைகளின் குஞ்சுகள் என்பனவற்றை விரும்பி உண்ணும். ஆபிரிக்கக் காடுகளில் கொம்பு மூக்கன் பறவைகள் எப்போதும் குரங்குகளைப் பின்தொடர்ந்து செல்கின்றன.குரங்குகள் மரங்களில் தாவும்போது அங்கிருந்து வெளிப்படும் வண்டுகளையும் பூச்சிகளையும் பிடித்துத் தின்பதற்கே அவை இவ்வாறு செல்கின்றன.

## கூடுகட்டி அடைகாத்தல்

ஆணும் பெண்ணுமாக இரண்டு கொம்பு மூக்கன் பறவைகள் ஜோடி சேர்ந்துவிட்டால், அவை பிரிவதே இல்லை. சில சமயம் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றாகவே வாழ்கின்றன. இவற்றின் ஆயுட்காலம் சுமார் 45 ஆண்டுகளாகும்.

பெண் பறவைதான் முதலில் மரப்பொந்தைத் தேர்ந்தெடுக்கும். அதில் ஆண்பறவை கூட்டை அமைக்கும். முட்டையிடும் சமயம், பெண் பறவை பொந்துக்குள் சென்றுவிடும். அதன்பின் ஆண் பறவை மென்று அரைத்து உமிழ்ந்த மரக்கூழ், தன்னுடைய எச்சம், மண் முதலியவற்றால் பொந்தினை தனது அலகு நுழைய சிறு துளையை மட்டும் வைத்துவிட்டு மூடிவிடும். இவை மரப்பொந்தில் கூடு அமைப்பதற்காக மிருதுவான ஈர மண்ணை கரையான் புற்றிலிருந்து மட்டுமே எடுக்கின்றன. கூடு அமைக்கும் வேலையை செய்து முடிக்க சுமார் ஒரு மாத காலம் வரை செல்கின்றது.

பொந்துக்குள் அடைபட்டு அடைகாத்துக்கொண்டிருக்கும் பெண் பறவைக்கு ஆண் பறவை தன் தொண்டைப் பையில் உணவைச் சேகரித்துக்கொண்டு வந்து பொந்தின் துவாரம் வழியாக அதன் வாய்க்குள் செலுத்தும்.

திடீரென்று அந்த ஆண் பறவை ஏதாவது விபத்தில் இறந்துவிட்டால், அடைபட்டிருக்கும் அந்தப் பெண்பறவை கூட்டுக்குள்ளேயே இறந்துவிடும். அடைகாக்கும்போது, பெண் பறவை நீர் அருந்துவதில்லை. ஆண் பறவை கொண்டுவந்து கொடுக்கும் பழங்கள், பூச்சிகள் இவற்றில் உள்ள ஈரமே அதற்குப் போதுமானது. ஆண் பறவை கொண்டு வந்த இரை அதற்குப் பிடிக்கவில்லை என்றால் அதனை துவாரம் வழியே வீசிவிடும்.

## குஞ்சுகள்

குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்ததும் தாய்ப்பறவை மட்டும் பொந்தின் வாசலை உடைத்துக்கொண்டு வெளியே வரும். ஆண்பறவை உடைந்த வாசலை மீண்டும் பூசி துவாரம் ஒன்றை மாத்திரம் வைத்துவிட்டு ஏனைய பகுதிகளை மூடிவிடும். குஞ்சுகளுக்கு ஆண் மற்றும் பெண் பறவை இரண்டும் அத்துவாரம் வழியே இரையை ஊட்டும். மூன்று மாதங்களில் குஞ்சுகள் வளர்ந்து, பொந்தை உடைத்துக்கொண்டு வெளியே வந்து பறக்கத் தொடங்குகின்றன.

இப்பறவைகள், மனிதர்கள் வாழும் இடத்திற்கு வருவதை விரும்புவதில்லை. தமது இருப்பிடத்திற்கு மனிதர்கள் வந்தால் தமது வெறுப்பைக்காட்ட காய்ந்த குச்சிகளை அவர்களது தலையில் போட்டு விரட்டுகின்றன.

## பல வகையான கொம்பு மூக்கன்கள்

உலகிலேயே மிகப்பெரிய கொம்பு மூக்கன் பறவை ஆபிரிக்காவில் உள்ள 'காண்டா மிருகக்கொம்பு மூக்கன்' ஆகும். இதன் நீளம் அலகின் நுனி முதல் வால் நுனி வரை சுமார் 1 மீற்றர் ஆகும். இதன் நிறை சுமார் 4.5 கிலோகிராம் ஆகும்.

மிகச்சிறிய கொம்பு மூக்கன் ஒரு புறா அளவு மாத்திரமே இருக்கும். இவற்றைத் தவிர, சாம்பல் கொம்பு மூக்கன், நிலக்கொம்பு மூக்கன், பெரிய கொம்பு மூக்கன் கென்யா கொம்பு மூக்கன், மலேசியா கொம்பு மூக்கன், மலபார் கொம்பு மூக்கன் உள்ளிட்ட பல்வேறு விதமான கொம்பு மூக்கன்கள் உலகில் வாழ்கின்றன.

அனைத்து கொம்பு மூக்கன்களும் வானில் பறப்பதில்லை. 'நிலக்கொம்பு மூக்கன்' என்றும் பறவைக்கு நன்றாகப் பறக்க முடிவதில்லை. இது பெரும்பாலும் நடந்தே செல்லும். தரையில் தான் இரை தேடும். எனினும், ஏனைய கொம்பு மூக்கன்களைப் போன்று மரப் பொந்தில்தான் கூடு அமைக்கும்.

நமது அயல் நாடான இந்தியாவின் வட மற்றும் வடமத்திய பிராந்தியங்களான உத்தரப்பிரதேசம், பீகார், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் மலபார் கொம்பு மூக்கன்கள் அதிகம் வாழ்கின்றன. இவை பழங்களை மாத்திரமே உணவாகக் கொள்கின்றன.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I (கடந்த வாரத் தொடர்ச்சி...)

பெயர்: ................................................ நேரம்: 45 நிமிடங்கள்

★ *27ஆம், 28 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் வரிசையின்கீழ்க் கோடிடுக.*

27. (1) வெண்டி, தக்காளி, புடோல், பாகல் (2) கிளி, புறா, பறவை, காகம்
(3) ரோசா, செவ்வரத்தை, செவ்வந்தி, அந்தூரியம் (4) மேசை, கதிரை, கட்டில், அலுமாரி

28. (1) தென்னை, பனை, கமுகு, கித்துள்
(2) நாய், பூனை, சிங்கம், மிருகம்
(3) வாள், சுத்தியல், சீவுளி, துறப்பணம்
(4) கண்டி, மாத்தளை, கொழும்பு, திருகோணமலை

★ *பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி 29 ஆம், 30ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.*




29. அப்பிள் பழம் ஒன்றையும் மாம்பழம் ஒன்றையும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?
(1) ரூபாய் 70.00 (2) ரூபாய் 50.00 (3) ரூபாய் 60.00 (4) ரூபாய் 40.00

30. அப்பிள் பழங்கள் 4 இனதும் மாம்பழங்கள் 2 இனதும் விலை யாது?
(1) ரூபாய் 100.00 (2) ரூபாய் 120.00 (3) ரூபாய் 140.00 (4) ரூபாய் 75.00

31. 

தாவரம், மரம், தென்னை, ரோஜா என்பனவற்றுக்கு இடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு அருகிலுள்ள உரு வரையப்பட்டுள்ளது. இதில் D இனால் காட்டப்படுவது;
(1) மரம் (2) தென்னை (3) ரோஜா (4) தாவரம்

32. ஒரு வாங்கில் ஆண்பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். முன்பக்கத்தில் இருந்து கணக்கிடும்போது, கஜன் 10 ஆவதாக அமர்ந்திருந்தான். பின்பக்கத்திலிருந்து கணக்கிடும்போது, கஜன் 5 ஆவதாக அமர்ந்திருந்தான். வாங்கில் எத்தனை ஆண்பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?
(1) 15 (2) 13 (3) 14 (4) 16

★ *பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து, அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.*

33. இது மூன்று எழுத்துக்களைக்கொண்ட சொல்லாகும். முதலாம் எழுத்து கண்ணில் உண்டு காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு செவ்வாயில் இல்லை.
......................................................................

34 'A' என்பவர் 'B' இன் தாய் ஆவார். ஆனால், 'B' என்பவர் 'A' இன் மகன் அல்லன். அப்படியாயின், 'B' யார்?
......................................................................


35. ஒரு விருந்தில் எட்டுப்பேர் கலந்துகொண்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரோடு கைகுலுக்கிக்கொண்டால், அங்கு எத்தனை கைகுலுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்?
......................................................................




36. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரிலிருந்து இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைக்க. இப்புதிரை விடுவிக்க தரப்பட்டுள்ள உதவிக்கூற்றுக்களைப் பயன்படுத்துக.

**இடமிருந்து வலம்**
1. இவற்றுக்கு இறகு உள்ளது.
4. 'நாள்' என்பதன் ஒத்தசொல்.

**மேலிருந்து கீழ்**
2. உலகம் என்பதன் ஒத்தசொல்.
3. கைது செய்யப்பட்டவர்.





37.  இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கையை எழுதுக.
......................................................................

★ *கீழே காணப்படும் அடங்கல் வரைபடத்தை அவதானித்து, 38 முதல் 40 வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*

38. வாழைப்பழத்தை மட்டும் விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?
......................................................................

39. அப்பிள் பழத்தை விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?
......................................................................





40. மூன்று பழங்களையும் விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?
......................................................................


## வினாத்தாள் I இற்கான விடைகள்


*(பெப்ரவரி 15, 22 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 09. 2 | 17. 2 | 25. 4 | 33. கத்தி |
| 02. 3 | 10. 3 | 18. 2 | 26. 4 | 34. மகள் |
| 03. 4 | 11. 4 | 19. 2 | 27. 2 | 35. 28 |
| 04. 3 | 12. 3 | 20. 3 | 28. 2 | 36. →  |
| 05. 3 | 13. 3 | 21. 2 | 29. 2 | 37. 2 சதுரங்கள் |
| 06. 2 | 14. 4 | 22. 2 | 30. 3 | 38. 6 |
| 07. 1 | 15. 3 | 23. 2 | 31. 2 | 39. 25 |
| 08. 3 | 16. 3 | 24. 2 | 32. 3 | 40. 8 |

# இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்







அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமைந்துள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் புனர்நிர்மாணத்தினை அடுத்து, கடந்த 2010 ஆம் ஆண்டு மற்றுமொரு புதிய அம்சத்தை உள்ளடக்கியதாக, மக்கள் பார்வைக்கு அது திறந்துவைக்கப்பட்டது. அதற்கமைய, உலகில் ஏற்கனவே வாழ்ந்ததும் வாழ்கின்றதுமான விலங்குகளின் எலும்புக்கூடுகளைக் காட்சிப்படுத்தும் வகையிலான 'ஏஜ் ஓஃப் மெமல்ஸ்' (Age of Mammals) எனும் பகுதியே அதுவாகும். ராட்சத டைனோசர் விலங்குகளின் எலும்புக்கூடுகளிலிருந்து பூனைபோன்ற மிகச் சிறிய பாலூட்டி விலங்குகளின் எலும்புக்கூடுகள் வரை இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த பாலூட்டி விலங்குகளின் புரட்சிகரமான வாழ்க்கை வரலாற்றை இங்கு சென்றால் விரிவாக அறிந்துகொள்ளலாம். கண்ட நகர்வு, காலநிலை மாற்றம், விலங்குகளின் விருத்தி போன்றவை பற்றி அறிந்து கொள்வதற்கு இந்த எலும்புக்கூடுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். 'ஏஜ் ஓஃப் மெமல்ஸ்' பகுதியில் சுமார் 240 பாலூட்டி விலங்குகளின் எலும்புக்கூடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எலும்புகள் ஒன்றிணைக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட 38 எலும்புக்கூடுகள் அவற்றில் அடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளும் தேசிய கீதங்களும்



'தேசிய கீதம்' என்பது, ஒரு நாட்டு மக்களிடையே நாட்டுப் பற்றை ஏற்படுத்தும் விதத்தில் இயற்றப்பட்டதாகும். இவை நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தேசிய கீதங்கள் உருவாக்கப்பட்டு வந்துள்ளதோடு, 20 ஆம் நூற்றாண்டிலேயே அவை பெரிதும் புழக்கத்துக்கு வந்துள்ளன. பொதுவாக, அனைத்து நாடுகளிலும் தேசிய கீதங்கள் பாவனையில் இருக்கின்றபோதும், அவற்றில் சில நாடுகளின் தேசிய கீதங்கள் பற்றி இங்கு நோக்குவோம்

உலகில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட தேசிய கீதமாக ஒல்லாந்து நாட்டில் உருவான 'ஹெட் வீல் ஹெல்மூஸ்' என்ற கீதத்தைக் குறிப்பிடலாம். 1568 - 1572 காலப்பகுதிகளில் உருவாக்கப்பட்ட இந்த தேசிய கீதமானது, அப்போது ஒல்லாந்து நாட்டை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்த ஸ்பானிய அரசுக்கெதிராக உருவாக்கப்பட்டதாகும்.

'கிமிகாயோ' என ஆரம்பமாகும் ஜப்பானிய தேசிய கீதமானது, கி.பி. 795-1185 காலப் பகுதியில் எழுதப்பட்ட கவிதையொன்றாகும். 1868 இல் ஜப்பானின் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்ட இந்த கீதத்துக்கு 1880 இல் இசை அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், 'உலகிலேயே மிகச் சிறிய தேசிய கீதம்' என்ற பெருமையை ஜப்பானிய தேசிய கீதம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




'இறைவா, என் அரசியைப் பாதுகாப்பாயாக!' என்று ஆரம்பமாகின்ற பிரித்தானிய தேசிய கீதமானது, 1745 இல் பாவனைக்கு வந்துள்ளது. எனினும், இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ் போன்ற நாடுகளுக்குத் தனித்தனியான தேசிய கீதங்கள் பாவனையில் உள்ளன. அந்தவகையில், 'ஜெருசலமும் எதிர்பார்ப்புக்குமான கீர்த்தி பெற்ற நாடு' என்பது இங்கிலாந்தில் பாவனையில் உள்ள தேசிய கீதமாகும். 'ஸ்கொட்லாந்து மலர்கள்' என்பது ஸ்கொட்லாந்து நாட்டின் தேசிய கீதமாகும். அத்துடன், 'எனது பெற்றோர்களின் தேசம்' என்று ஆரம்பிக்கும் தேசிய கீதமானது, வேல்ஸ் நாட்டின் தேசிய கீதமாகும்.

'ஏகாதிபத்தியத்தின் முன்னெடுப்பு' என்று ஆரம்பமாகின்ற ஸ்பெய்ன் நாட்டின் தேசிய கீதமானது, 1770 இல் பாவனைக்கு வந்துள்ளது.

டென்மார்க் நாடானது, இரண்டு தேசிய கீதங்களைக் கொண்டுள்ளது. இந்நாட்டின் மிகப் பழமையான கீதம் 1780 இல் பாவனைக்கு வந்துள்ளது.

அவ்வாறே, பிரான்ஸ் நாட்டின் தேசிய கீதமானது, 1790 இல் எழுதப்பட்டு 1795 இல் பாவனைக்கு வந்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முதன்முதலில் தேசிய கீதம் பாவனைக்கு வந்த நாடு சேர்பியாவாகும். 'எழுச்சி பெறும் சேர்பியா' என்ற பாடல் வரியோடு ஆரம்பமாகும் இந்த தேசிய கீதமானது, 1864 இல் பாவனைக்கு வந்துள்ளது.

'ஜனகனமன' என்று ஆரம்பமாகும் இந்திய தேசிய கீதமானது, வங்காள மொழியிலும் சிங்கப்பூர் தேசிய கீதமானது, மலாய் மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.



சுவிற்சர்லாந்து நாட்டின் தேசிய கீதமானது, அந்நாட்டில் பாவனையில் உள்ள ஃப்ரெஞ்ச், ஜேர்மன், இத்தாலியன், ரோமானிஷ் ஆகிய நான்கு மொழிகளிலும் இசைக்கப்படுகின்றது. நியூசிலாந்தில் இரண்டு மொழிகளில் தேசிய கீதம் பாவனையில் உள்ளது. அதன் முதற் பகுதி நியூசிலாந்து ஆதிவாசிகளின் மாஓரி மொழியிலும் அடுத்த பகுதி ஆங்கிலத்திலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





君が代

君が代は
千代に八千代に
さざれ石の
巌となりて
苔のむすまで

கெனடா நாட்டில் ஆங்கிலம் மற்றும் ஃப்ரெஞ்ச் ஆகிய மொழிகளில் அந்நாட்டு தேசிய கீதம் பாவனையில் இருந்து வருகின்றது. அமெரிக்க தேசிய கீதமானது 'நட்சத்திரங்கள் பொதிந்துள்ள கொடி' என்று ஆரம்பமாகின்றது. எனினும், அங்குள்ள மாநிலங்களுக்கென்று தனித்தனியான தேசிய கீதங்கள் உருவாக்கப்பட்டு பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவில் 11 மொழிகளில் ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய கீதம் பாடப்படுகின்றது. முதலாம், இரண்டாம் வரிகள் அந்நாட்டின் பிரதான மொழிகளிலும் அடுத்தடுத்த வரிகள் ஏனைய ஒவ்வொரு மொழியிலும் பாடப்பட்டு வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 'எம் மன்னர் லண்டன் நகரில் என நினைக்கின்றோம்...' என்று ஆரம்பமாகும் தேசிய கீதம் பாவனையில் இருந்து வந்துள்ளது. ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்ததை அடுத்து, கம்பளையைச் சேர்ந்த பீ.பி. இலங்கசிங்க என்பவரால் இயற்றப்பட்ட ஒரு பாடலே இலங்கையின் முதலாவது தேசிய கீதமாகப் பாவனையில் இருந்தது. இதன் பின்னரே, 'நமோ நமோ மாதா' என்ற தேசிய கீதம் பாவனைக்கு வந்தது. இதனை இயற்றியவர் ஆனந்த சமரகோன் ஆவார். 1951 ஆம் ஆண்டு இலங்கை அமைச்சரவை இலங்கையின் தேசிய கீதமாக இதனை அங்கீகரித்தது. 1961 இல் 'நமோ நமோ' என்ற வரிகள் 'ஸ்ரீ லங்கா மாதா' என்று திருத்தம் செய்யப்பட்டன.

**- ஐ.ஏ. ஸத்தார்**



**Tamil lyrics of the Anthem**

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதோர் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

# எவரும் சாதிக்கலாம்!



'ஹெலன் கெல்லர்' எனும் அமெரிக்கப் பெண்மணி பார்வை, கேட்டல், பேச்சு ஆகிய மூன்று புலன்களும் அற்றவர். எனினும், அவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாகவும் விரிவுரையாளராகவும் நூலாசிரியராகவும் திகழ்ந்து உலகின் கவனத்தையே ஈர்த்தவர். தனது குறைகளைப் பொருட்படுத்தாமல் உலகை வலம் வந்த இவர், உலகை ரசித்தார்; நேசித்தார்.

ஒரு நாள் ஹெலன் கெல்லரைத் தேடி அவரது வீட்டுக்கு ஒருவர் வந்தார். ஹெலன் தனது வேலைகளை முடித்து வரும் வரை வீட்டுத்தோட்டத்தில் அந்த நபர் காத்திருந்தார். சிறிது நேரத்தில் தனது வேலைகளை முடித்துக் கொண்டு அந்த நபரைச் சந்திப்பதற்காக, ஹெலன் தோட்டத்திற்கு வந்தார். வரும் வழியில் தோட்டத்து மலர்களை தனது விரல்களால் தொட்டு அவற்றின் வாசனையை நுகர்ந்து இன்புற்றார்.



இதமான தென்றல் அவர் மீது படும்போது, அதை முகம் மலர்ந்து ரசித்தார். அப்போது ஒரு ஓரமாகப் படுத்துக்கிடந்த பூனை அவரை நாடி வந்தது. அதை கைகளால் அணைத்து, தடவிக்கொடுத்து மனம் மகிழ்ந்தார்.

பின்னர், தனது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த நபரை சந்தித்தார். அந்த நபரை நோக்கி " இந்தக் காலைப்பொழுது எவ்வளவு அழகாகவும் இதமாகவும் இருக்கிறது... என்னைவிட நீங்கள் இதனை நன்கு அனுபவித்திருப்பீர்கள்'' என ஹெலன் சைகையில் கூறினார். அந்த நபர் வெட்கித் தலைகுனிந்தார். ''எல்லாப் புலன்களும் இருந்தும் நான் எதையும் ரசிக்கவில்லையே!'' எனக்கூறி வருந்தினார். அத்துடன், ஹெலனின் செயற்பாடுகளைக் கண்டு வியந்துபோனார்.



உண்மையில், குறைபாடுகள் இருப்பது எமது உடலில் அல்ல - உள்ளத்திலேயே ஆகும். எனவே, இல்லாததை எண்ணி வருந்தாமல், இருப்பதை நன்கு பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம் என்பதற்கு ஹெலனின் நடவடிக்கைகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். சாதிப்பதற்கு நம் மனம் நம்பிக்கைகொள்ள வேண்டும். அதன்படி செயற்பட்டால், அனைவரும் சாதிக்கலாம்!

**-ஜெ. ஷிபாகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*'கொஸ்ட்டா கொன்கோடியா' எனும் நவீன அதி சொகுசு இத்தாலிய பயணிகள் கப்பல் அண்மையில் இத்தாலியின் ஜிக்லியோ தீவுக்கருகில் பாரிய முருகைக்கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நீங்கள் அறிந்ததே! இந்தக் கப்பல் விபத்துக்குள்ளானமையானது, இற்றைக்கு சரியாக 100 வருடங்களுக்கு முன்னர் பனிப்பாறையில் மோதுண்டு கடலில் மூழ்கியதால் பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்திய டைட்டானிக் கப்பலின் பேரழிவை நினைவு கூருவதாக அமைகின்றது*



## கப்பல் விபத்து

கொஸ்ட்டா கொன்கோடியா கப்பலானது, கடந்த ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இத்தாலி நாட்டின் ரோம் நகரின் சிவ்டெவேசியா எனும் துறைமுகத்தில் இருந்து தனது பயணத்தை 4,229 பேருடன் ஆரம்பித்தது. இதில் இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெய்ன், அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும்.மேற்பட்ட உல்லாசப் பயணிகளும் கப்பலின் செயலணி உறுப்பினர்களும் பயணித்திருந்தனர்.

இக்கப்பலானது, இத்தாலிக்குச் சொந்தமான கக்லியாரி, பெலெர்மோ ஆகிய துறைமுகங்களிலும் அதன் பின் சவோனா துறைமுகத்திலும் பின்னர் பிரான்ஸின் மாசேல் துறைமுகத்திலும் அதனைத் தொடர்ந்து ஸ்பெய்னின் பாசிலோனா மற்றும் பெல்மாதெ மொலொர்கா ஆகிய துறைமுகங்களிலும் தரித்துச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், கப்பல் பயணம் ஆரம்பிக்கப்பட்டு முதலாவதாக ஜிக்லியோ தீவிலேயே அது நிறுத்தப்பட்டது. சில மணித்தியாலங்களின் பின் அத்தீவிலிருந்து பயணித்தை ஆரம்பித்த குறித்த கப்பல், ஜிக்லியோ தீவிற்கு அருகில் கடலில் காணப்பட்ட பாரிய முருகைக்கற்பாறையில் மோதியது. இதனை அடுத்து கப்பலின் பலம் வாய்ந்த இரும்புக் கட்டமைப்பு மாபெரும் சத்தத்துடன் சிதைந்து இரண்டாகப் பிளவுபட, கப்பலில் இருந்தவர்கள் நடப்பது என்னவென்று தெரியாமல் அச்சத்தால் கூக்குரலிட்டனர். கப்பல் விபத்தில் சிக்கிக்கொண்டது என்று அறிந்ததும் உயிர் காப்புப் பட்டிகளை அணிந்துகொண்டு உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரண்டாவது டைட்டானிக்காக மாறிய
# ாஸ்ட்டா கொன்கோடியா'

## கொஸ்ட்டா கொன்கோடியா

114, 500 தொன் நிறையும் 290 மீற்றர் நீளமும்கொண்ட



விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றும் பணியில்...



காப்புப் படகுகளில் ஏறுவதற்காக முண்டியடித்தனர். கப்பல் விபத்துக் குள்ளானபோது, கப்பலின் இரு புறங்களும் வேகமாக அசைந்ததால், சிலர் கடலுக்குள் வீசி எறியப்பட்டனர். அந்தத் தருணமானது, டைட் டானிக் திரைப்படத்தின் இறுதிக் கட்டத்தை நினைவூட்டுத்தியதாக அங்கிருந்த பல பயணி கள் தெரிவித்தனர். இக்கப்பலின் உணவு தயாரிப்பாளர் ஒருவர் இது பற்றிக் கூறுகையில்: ''எல்லோரும் குழப்பம் அடைந்து அங்குமிங்கும் ஓடினர். பிள்ளைகள் உரத்துச் சத்தமிட்டு அழுதன. உயிர்காப்புப் படகுகளில் ஏற அனைவரும் முண்டியடித்தனர். சிலர் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டனர் எனத் தெரிவித்துள்ளார். இந்த விபத்துப் பற்றி கப்பலில் இருந்த மேடைப்பாடகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கை யில்: ''பிள்ளைகளையும் பெண்களையும் உயிர் காப்புப் படகுகளில் ஏற்றி அனுப்புவதற்கு கப்பலில் இருந்த வயோதிபர்கள் இடமளிக்கவில்லை. அவர்கள் எதனையும் பொருட்படுத்தாமல் பலாத்காரமாக படகுகளில் ஏறிக்கொண்டனர்'' என்று கூறியுள்ளார்.

## விசேட நடவடிக்கை

கப்பல் விபத்துக்குள்ளானதை அறிந்து அப் பகுதிக்கு உடனடியாக விரைந்த இத்தாலிய உயிர் காப்புப் படையினர் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினரும் ஒன்றிணைந்து கடலில் மூழ்கிக்கொண்டிருந்த இக்கப்பலின் அடுக்குமாடிகளில் சிக்கியிருந்தவர்களைக் காப்பாற் றும் விசேட நடவடிக்கை களில் ஈடுபட்டனர். இவர் களுடன் சுழியோடிகள் குழுவும் இணைந்து கொண்டது. இந்த நடவடிக்கைக்கு அமைய, முதலில் கப்பலின் மேல் மாடியில் சிக்கியிருந்தவர்களைக் காப்பாற்றி கரையோரப்பகுதிக்குக் கொண்டு சென்றனர். அத்துடன், கடல் நீரில் பாய்ந்த மற்றும் தூக்கி எறியப்பட்டவர்களையும் காப் பாற்றியதோடு, நீரில் மூழ்கியவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டனர்.

## துரதிர்ஷ்ட சம்பவம்

இந்தக் கப்பலானது, இத்தகைய துரதிர்ஷ்ட விபத்தில் சிக்கியது எவ்வாறு? என்பது பற்றிய சரியான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை. எனினும், கப்பல் தவறான திசைவழியாகவே ஜிக்லியோ தீவுக்குள் பிரவேசித்ததாகவும் அது தரைப்பகுதிக்கு மிகச் சமீபமாகச் சென்றதனால் அங்கிருந்த பாரிய முருகைக்கற்பாறையில் மோதியதாகவும் அனுமானிக்கின்றனர். இந்த விபத்தின்போது, கப்பலின் நீருக்கடியில் இருக் கும் 160 அடி நீளமான உறுதியான இரும்புக் கட்டமைப்பு பிளவுபட்டுள்ளது. இதனால், கப்பலுக்குள் நீர் நிறைந்து அது ஒருபக்கமாகச் சாய்ந்து மூழ்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படு கின்றது. எவ்வாறாயினும், கொஸ்டா கொன்கோடியா கப்பலின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மையமாக வைத்து, கப்பல் தனது பயணப் பாதையில் இருந்து வெளியேறியது ஏன்?, விபத்தில் சிக்கியது எவ்வாறு? போன்ற தகவல்களைக் கண்டுபிடித்துவிடலாம் என இத்தாலிய அதிகாரி கள் கூறுகின்றனர்.

## கப்பலின் கெப்டன்



கப்பலின் கெப்டன் கைது செய்யப்பட்ட வேளையில்...

விபத்து நடந்து 24 மணித்தியாலங்க ளுக்குள் கொஸ்ட்டா கொன்கோடியா கப்ப லின் கெப்டனாகிய பிரான்சிஸ்கோ ஷெட்டினோவும் அவரது உதவியாள ரும் கைது செய்யப் பட்டு விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டனர். பொதுவாக, கப்பலொன்று விபத்துக்குள்ளானால், அதிலுள்ள பயணிகள் அனைவரும் உயிர் காப்புப் படகுகளில் ஏறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் வரை கப்பலின் கெப்டன் அக்கப்பலில் தங்கியிருப்பதே முறையாகும். எனினும், கொஸ்ட்டா கொன்கோடியா கப்பலின் கெப்டனும் அவரது உதவியாளரும் ஏனைய அனைவருக்கும் முன்பாக தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு கரைக்கு விரைந்துள்ள னர். அத்துடன், நடந்த உண்மைகளை மறைத்து தவறான செய்திகளைக்கூறி தம்மை ஏமாற்றியதாக அவர்களுக்கு எதிராகக் கப்பல் பயணிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.









இத்தாலி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 'கொஸ்ட்டா கொன்கோடியா' கப்பலானது, பல அடுக்குமாடிகளைக் கொண்டது. ஆடம்பர - சுகபோக வசதிகளைக்கொண்ட அறைகளுடன் 5 உணவகங்களையும் 13 மதுபான நிலையங்களையும் சிறிய நீர்த்தடாகமொன்றும் மேலும் 4 நீர்த்தடா கங்களையும் நாடக அரங்கம், திரைப்பட அரங்கம், கெசினோ, பெல்கனி உள்ளிட்ட பல சொகுசுகளை உள்ளடகியுள்ளது. அத்துடன், இக்கப்பலானது உலகின் மிகப்பெரிய சொகுசு பயணிகள் கப்பல் நிறுவனமாகிய 'கானிவல்' கப்பல் நிறுவனத்திற்கு சொந்தமானதாகும்.

-இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வெட்டுக்களின் முக்கியத்துவங்கள்

| கல்வெட்டுக்கள் | அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் |
|---|---|
| பதுளைத் தூண் கல்வெட்டு | வணிக நகரமென்றின் நிர்வாகம் பற்றியது. |
| கல்பொத்த கல்வெட்டு | கலிங்க அரச பரம்பரை, நிஸங்கமல்ல மன்னனின் சமயப்பணி. |
| வெஸ்ஸகிரிக் கல்வெட்டு | நீர் விநியோகம் பற்றிய விதிகள் பற்றியது. |
| அம்பகமுவ கல்வெட்டு | 1 ஆம் விஜயபாகுவின் சேவைகள் பற்றியது. |
| கட்டுகஹல் கல்வெட்டு | நிஸங்கமல்ல மன்னனின் தானம் வழங்கும் விதிகள் பற்றியது. |
| போகவத்தல கல்வெட்டு | மாகாண அரச வம்சம் பற்றியது. |
| குச்சவெலிக் கல்வெட்டு | மகாயான பௌத்தம் பற்றியது. |
| கொடவாயக் கல்வெட்டு | சுங்க வரிகள் பற்றியது. |

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி.





## மருத்துவம்



குருதியின் வகைகள்: A, B, AB, O

அறுவைசிகிச்சையின்போது உடல் விறைப்பதற்குப் பயன்படுத்துவது: ஈதர்

காச நோய்க்குரிய தடுப்பு மருந்து: BCG

எலியால் உண்டாகும் நோய்: எலிக்காய்ச்சல்

மனித உடலில் மிக நீண்ட எலும்பு: தொடை எழும்பு

விற்றமின் A குறைவால் ஏற்படும் நோய்: மாலைக்கண்

விற்றமின் B குறைவால் ஏற்படும் நோய்: பெரிபெரி

விற்றமின் C குறைவால் ஏற்படும் நோய்: ஸ்கேபி

விற்றமின் D குறைவால் ஏற்படும் நோய்: குருதிச்சோகை

பெனிசிலின் எனும் மருந்து தயாரிக்கப்படும் தாவரம்: பெனிசிலியம் எனப்படும் பங்கஸ் தாவரம்

ந.விதுஷன், பாரதி வித்தியாலயம், கிளிநொச்சி.

## துவிச்சக்கர வண்டி



இரண்டு சில்லு வண்டி
இருவர் செல்லும் வண்டி
அழகான வண்டி
ஆற்றல் மிக்க வண்டி
விரைந்து செல்லும் வண்டி
எளிமையான வண்டி
எம்மைச் சுமந்து செல்லும்
எல்லோர் மனதையும் வெல்லும்
ஈருருளி வண்டி
எம் மனதில் நிலைத்த வண்டி

எம்.குலராஜ்,
யா/ பண்ணாகம்
மெய்கண்டான் ம.வி,
யாழ்ப்பாணம்.

## குளங்களும் கட்டிய மன்னர்களும்

| | |
|---|---|
| பண்டுகாபயன் | பசவக்குளம் |
| தேவநம்பியதீசன் | திசாவாவி |
| வசபன் | மகாவிலச்சிய, மானாகெட்டிய, நொச்சிப்பொத்தான, எலஹெற கால்வாய் |
| மகாசேனன் | மின்னேரியா, கவுடுளுவாவி, குருளுவாவி, மகாகணதரா வாவி |
| உபதிஸ்ஸ | தோப்பா வாவி |
| தாதுசேனன் | கலாவாவி, ஜயகங்கை |
| 2 ஆம் முகலன் | பதவியாக்குளம், நச்சதூவக்குளம் |
| 1 ஆம் அக்போ | மினிப்பே அணைக்கட்டு, சிறிவட்டமானக் குளம் |
| 2 ஆம் அக்போ | கந்தளாய் குளம், கிரிதலேகுளம் |
| 1 ஆம் பராக்கிரமபாகு | பராக்கிரம சமுத்திரம் |

எஸ்.ஹய்பா, முஸ்லிம் மகளிர் கல்லூரி, காலி.




## நரியிடம் ஏமாந்த சிங்கம்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் சிங்கத்திற்கு நன்றாகப் பசி எடுத்தது. பசிக் கொடுமையைத் தாங்க முடியாத சிங்கம் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தது. அப்போது, ஒரு நரியைக் கண்டு அதனிடம், "நீ எங்காவது உணவு இருப்பதைப் பார்த்தாயா? என்று கேட்டது. "நான் காணவில்லை சிங்கராஜாவே, ஆனால் நான் இன்றைக்கு உங்களுக்கு ஓர் அறுசுவை உணவைக் காட்டுகின்றேன்" என்றது நரி. "அப்படியா! சீக்கிரமாகக் காட்டு பசி என் வயிற்றைக் கிள்ளுகிறது" என்றது சிங்கம். நரி ஓடிப்போய் ஒரு கழுதையை அழைத்து வந்தது.

கழுதையைக்கண்ட சிங்கம் பசிக் கொடுமையால் அதனை நோக்கிப் பாய்ந்தது. எனினும், கழுதை தப்பி ஓடிவிட்டது. சினமடைந்த சிங்கம் நரியைப் பார்த்தது. இதனால், அச்சமடைந்த நரி தன் உயிரைக் காப்பாற்றுவதற்காக மீண்டும் கழுதையை அழைத்து வந்தது, இவ்வாறு இரண்டாவது முறை வந்த கழுதையை சிங்கம் கொன்று விழ்த்தியது.

அப்போது, கழுதையின் மூளையின் சுவையை அறிய ஆவலுடன் இருந்த நரி திடீரென எழுந்து, "எங்கள் காட்டு ராஜாவாகிய தங்களின் உடலில் கழுதையின் இரத்தம் படிந்திருப்பதால் நீங்கள் சுத்தமாகக் குளித்துவிட்டு வந்து உண்ணுவதுதான் முறை" என்று கூறியது. அது கூறியபடியே சிங்கம் குளிப்பதற்காக ஆற்றங்கரையை நோக்கிச் சென்றது.

இந்த நேரத்தைப்பயன்படுத்திய நரி கழுதையின் மூளையை சுவைத்துவிட்டு ஒதுங்கி நின்று கொண்டது. குளித்துவிட்டு வந்த சிங்கம் நரியைப் பார்த்து, "நண்பரே, கழுதையின் எல்லாப்பாகங்களும் உள்ளன. ஆனால், அதன் மூளையை மட்டும் காணவில்லையே" என்று கேட்டது. "மகாராஜா, கழுதைக்கு மூளை இருந்திருந்தால் எனது சொல்லைக்கேட்டு இரண்டாவது முறையும் தங்களிடம் வந்திருக்குமா?" என்று கூறியது நரி. இவன் கூறுவது உண்மைதான் என்று நினைத்தபடியே கழுதையைப் பூசித்து மகிழ்ந்தது சிங்கம்.

எஃப். ஸஸ்னா,
குளி/கிரி/சுலைமானியா மு.வி.,

## எமது நாட்டுக்கு உரித்தான தேரை: புஃபோ கொட்டகமய்



புஃபோ கொட்டகமய் என்பது இலங்கைக்கே உரித்தான ஓர் ஈருடக வாழியாகும். இலங்கையில் புகழ் பெற்ற விஞ்ஞானியான சரத் கொட்டகமவின் பெயரினால் இத்தேரை இனம் அழைக்கப்படுகின்றது. உடலின் முதுகுப்புறம் கபிலம் அல்லது செம்மஞ்சல் நிறமுடையது. இதன் வயிற்றுப்புறம் இளநிறமானது சருமம் உலர்ந்து காணப்படுவதுடன், கண்களிடையே இள நிறமான மூன்று கோடுகள் காணப்படுகின்றது. வளர்ந்த ஆண் தேரையின் உடல் 33mm-40mm வரை நீளமானது. பெண் தேரையின் உடல் 55mm - 63mm வரை நீளமானது. இவை அதிகமாக இரவிலேயே நடமாடித்திரியும். மத்திய மலைநாடு மற்றும் தென்மேற்குப் பிரதேசங்களில் அதிகமாக இதனைக் காணமுடியும்.

எம்.ஐ.எப். இஸ்ரத்,
இ/ஜெய்லானி தேசிய பாடசாலை, பலாங்கொடை.

## முதன்முதலில் விண்வெளியில் சுற்றியோர்

| பெயர் | நாடு | திகதி |
|---|---|---|
| யூரி ககாரின் | சோவியத் ரஷ்யா | 1961-08-12 |
| ஜேர்மன் ஸ்டெபனொச் | சோவியத் ரஷ்யா | 1961-08-06 |
| ஜோன் ஹார்வல் கிளேன் | அமெரிக்கா | 1962-02-20 |
| மெல்கம் ஸ்கொட் காபென்டர் | அமெரிக்கா | 1962-05-24 |
| அட்ரியன் நிக்கலொச் | சோவியத் ரஷ்யா | 1962-08-11 |
| பவல் ரோமானுவிச் பொபோவிச் | சோவியத் ரஷ்யா | 1962-10-03 |
| வால்பர் மார்ட் ஸ்வீரா | அமெரிக்கா | 1966-10-03 |
| லீரே கோடின் கூபர் | அமெரிக்கா | 1963-05-15 |
| வெலரி பய்கொஸ்கி | சோவியத் ரஷ்யா | 1963-06-14 |
| வெலன்டினா கெரெஸ்கோவா | சோவியத் ரஷ்யா | 1963-06-16 |

கலைக்காந்தன், கொ/மு/இந்துக்கல்லூரி, கொழும்பு-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்



'விஜய்' பத்திரிகையில் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டிக்கு நானும் சித்திரங்களை அனுப்பியிருந்தேன். எனினும், என்னுடைய சித்திரங்கள் இப்போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டனவா? இல்லையா? என்பது பற்றி அறிக்கிடைக்காமல் இருப்பதையிட்டு மிகவும் மனவேதனை அடைந்துள்ளேன்.

**- வேல்முருகன் சரண்யா, சாமிமலை.**

***★ மேற்படி போட்டியில் உரிய வெற்றியாளர்களை குறித்த போட்டி ஏற்பாட்டாளர்களது நடுவர்கள் குழுவே தெரிவுசெய்தது. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது***



***ன்பதற்கிணங்க, வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. என்றாலும், உங்கள் ஊக்கத்தைப் பாராட்டுகின்றோம். தொடர்ந்தும் முயற்சி செய்யுங்கள்.***

***(ஆ-ர்)***

நான் விஜய் பத்திரிகையின் ஆரம்ப கால வாசகர். விஜய் பத்திரிகையின் முதல் பிரதி தொடக்கம் இதுவரை வெளிவந்துள்ள பிரதி வரை வாங்கி வாசித்து. அவற்றில் உள்ளடங்கியிருக்கும் அனைத்து விடயங்களையும் படித்தறிந்து, தற்போது எனது பிள்ளைகளுக்கும் அதன் பயனைப் பெற்றுக் கொடுக்கின்றேன்.

**- ஏ.எம். அமானுல்லாஹ், முஸ்லிம் பாடசாலை வீதி, பெரிய நீலாவணை - 02.**

'உலகின் அதிவெப்பமான இடங்கள்', 'பராக்கிரம சமுத்திரம்', 'இராமாயணம்', 'ஒல்லாந்தர்' என்பன சுப்பர். அத்துடன், 'எமது வளிமண்டலம் விஷ வாயுக்கல் நிரம்பியுள்ளது', 'கிளிஞ்சல்களுக்கு வந்த இடைஞ்சல்' போன்ற ஆக்கங்களும் மிகவும் அறிவுபூர்வமானதாக இருந்ததோடு, பல பயன்களையும் தந்தன. நீ மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

**- ஏ.எச்.எஃப். ஸஹ்ரினா, கொட்டராமுல்லை.**

புவிக்கு விளைவிக்கப்படுகின்ற தீங்குகளைச் சுட்டிக்காட்டி, புவியைப் பாதுகாப்பதற்கு உன்னில் பிரசுரமாகும் ஆக்கங்களூடாக எமக்கு விழிப்புணர்ச்சி அளிக்கின்றாய். 'எமது வளிமண்டலம் விஷ வாயுக்களால் நிரம்பியுள்ளது' என்ற ஆக்கம் அதற்கு சான்று பகர்கின்றது. வளிமண்டலம் மாசடையும் விதம், வளிமண்டலம் மாசடைவதை எவ்வாறு தடுப்பது? போன்ற பல்வேறு தகவல்களை இந்த ஆக்கத்தினூடாக அறிந்துகொண்டேன். அத்துடன், 'பராக்கிரம சமுத்திரம்' பற்றி அறியத்தந்தமைக்கும் நன்றி.

**- எம்.ஏ. முஷ்ரிபா, ஸாதாத் ம.வித்., கொடபிடிய, அகுறஸ்ஸ.**

நீ தாங்கி வந்திருந்த அனைத்துத் தகவல்களும் சிறப்பானவை. அவற்றில் 'பராக்கிரம சமுத்திரம்' பற்றிய தகவல்கள் மிகவும் பயனுடையவை. அதை வாசித்து நான் ஏராளமான பயன்களைப் பெற்றுக்கொண்டேன். என்னைப் போல் உன்னை அனைவரும் வாசித்துப் பயன்பெற வேண்டும்.

***- ச. லதுசனா, நீர்கொழும்பு.***

'இமயமலையில் பனி மனிதர்கள் இருக்கின்றனர்', 'உலகின் அதிவெப்ப இடங்கள்', 'பராக்கிரம சமுத்திரம்', 'மிகப்பெரிய தங்க நாணயம்', 'வாரம் ஒரு நாடு', 'இராமாயணம்' மற்றும் 'விண்வெளித் தகவல்கள்' என உன்னில் வெளிவந்திருந்த அனைத்து




ஆக்கங்களும் உனது சிறப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தன. நீ மேலும் பல சிறப்பான தகவல்களை எமக்குத் தருவதற்கு எனது வாழ்த்துக்கள்.

**- எம். எஃப். அஸ்மா, 8 ஆம் வீதி, மஸ்கெலியா.**

வாரம் தோறும் புத்தம் புதிய செய்திகள் மற்றும் தகவல்களைக் கொண்டுவரும் விஜய்யே! உன்னால் பலரும் கல்வியில் முன்னேறி வருகின்றனர். 'விண்வெளிப் பயணத்தின் வரலாற்றுப் பதிவுகள் சில...', 'தெரிந்து கொள்வோம்' போன்ற பகுதிகள் என்னைக் கவர்ந்தவை.

**- தெ. தனுஷிகா, சிவன் கோவிலடி, சாவகச்சேரி.**

இந்த இதழில் (22.02.2012) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 29.02.2012.

**அனுப்ப வேண்டிய முகவரி:**




**வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.**



## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

1



4

வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க





5

### எதிர்க்கருத்துச் சொல் தருக

1. அசல் - ....................
2. உற்சாகம்- ....................
3. இளமை - ....................
4. மயக்கம்- ....................
5. பகை- ....................


3

### குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி எழுதுக —




2

### ஒரே எண்ணிக்கையையுடைய தொகுதியுடன் இணைக்க








தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.02.29ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 353**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## அறிவுக்கு விருந்து - 350 விடைகள்


**போட்டி: 01**



**போட்டி: 02**

- அப்பிள் - 3
- தக்காளி - 4
- வாழை - 6
- ஆனைக்கொய்யா - 5
- அன்னாசி - 2
- எலுமிச்சை - 5

**போட்டி: 03**




**போட்டி: 04**

1. பாதணி
2. சூரிய குடும்பம்
3. ஊடகம்
4. குடும்பம்

**போட்டி: 05**

1. குவைட் - டினார்
2. ரஷ்யா - ரூபிள்
3. மலேசியா - ரிங்கிட்
4. சவூதி அரேபியா - ரியால்
5. இந்தோனேஷியா - ருபியா

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 350 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜெ. அபிலாஷினி, கண்டி வீதி, சுமேதகம.

**போட்டி: 02**
எம். நபீல், பளளுவெவ, பலாகல.

**போட்டி: 03**
கே. மீரா, இணுவில் மேற்கு, இணுவில்.

**போட்டி: 04**
தே. சித்திரா, ஏ.ஜி.ஏ. லேன், சுண்ணாகம்.

**போட்டி: 05**
எஸ். சம்சுன், முள்ளிபுரம், புத்தளம்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ எஃப். தஸ்மா, தும்மலதெனிய.
- ★ வலியுல்லாஹ், கஹடோவிட்ட.
- ★ பே. தாரணி, யாழ்ப்பாணம்.
- ★ எம். ருஸ்தான், சிலாபம்.
- ★ வ. மதிஷாந், கலுதாவளை.
- ★ எஸ். சுர்பா, அட்டாளைச்சேனை.
- ★ க. ஸஷ்மிதா, திருகோணமலை.
- ★ என். ஆதிப், பஹலபிடிய.
- ★ சி. கமலேஷன், வத்தளை.
- ★ எல். லாயிகா, மாஞ்சோலைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

குருநாகல் சென். ஏன்ஸ் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கலை விழாவை ஆரம்பித்து வைப்பதற்காக, கல்லூரி அதிபர் டென்ஸில் மெண்டிஸ் வருகை தருவதையும் முதலாம் தர மாணவர்கள் அவரை வரவேற்று அழைத்துச் செல்வதையும் படத்தில் காணலாம். (படம்: யு.எல்.முஸம்மில்)



தெமட்டகொடையைச் சேர்ந்த அருள்நாதன் - விஜயலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வி சரண்யா, 18.02.2012 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் உட்பட, உறுவினர்கள் அனைவரும் இறைவனின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

மருதமுனையைச் சேர்ந்த அமானுல்லாஹ் - றுபைதா தம்பதியரின் செல்வப் புதல்வி ஃபாத்திமா அனூஃப், 20.02.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.




# ஓவியம் வரைவோம் - 90


ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

## வாகல்கட

தாகபையின் நான்கு புறங்களிலும் காணப்படுவதுதான் இந்த 'வாகல்கட' எனும் அமைப்பாகும். இது தோரணம் போன்ற ஓர் அமைப்பில் காணப்படுகின்றது. இலங்கைக்குரிய தனித்துவமான ஓர் அம்சமாக இதனைக் குறிப்பிடலாம். வேறு நாடுகளில் காணப்படும் தாகபைகளில் இந்த அமைப்பைக் காண முடியாது.




வாகல்கட ஒன்றின் கற்பனை முறைத் தோற்றம்



மிகிந்தலை கந்தக சைத்தியவின் கோட்டுப் படம்

இலங்கையில் மிகிந்தலை கந்தக சைத்தியவிலுள்ள வாகல்கட மிகவும் அலங்காரமானது. உயரமாக நிறுத்தப்பட்டுள்ள கற்றூண்களிலேயே, இந்த வாகல்கட நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வாகல்கட ஆனது, ஐந்து பாகங்களைக்கொண்டது. இந்த ஐந்து பாகங்களும் ஐந்து கற்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் நிர்மாணத்திற்காக செங்கல், சுண்ணாம்பு என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. வாகல்கட பகுதி தாதுகோபத்தின் கர்பக பகுதியில் அமைந்திருப்பதால், தாதுகோபத்தின் உறுதிப்பாட்டிற்கு அது காரணமாக அமைந்துள்ளது. இந்த வாகல்கட அமைப்பானது, மிரிஸவெடிய, ஜேதவனாராம, அபயகிரி, ருவன்வெலிசாய ஆகிய தாகபைகளிலும் காணப்படுகின்றது.



மிகிந்தலை கந்தக சைத்திய வாகல்கட கற்றூணில் உள்ள செதுக்கல் வேலைப்பாடுகள்

மிகிந்தலை கந்தக சைத்திய வாகல்கட



மிரிஸவெடிய வாகல்கட



# கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம். மயூரன், ரணபிம ரோயல் கல்., பேராதனை.



சாஜித் அஹ்மட், தாருல் உலூம் மு.ம.வித்., கேகாலை.



ஜெ. சுலக்ஷன், தமிழ் மகா வித்., வவுனியா.



எஃப். பஹீமா, அல்- பாஸியத்துல் நஸ்ரியா மு.பா.ம.வித்., பேருவளை.



எஸ். ஜனகன், விஸ்டம் சர்வதேச பாட., நீர்கொழும்பு.



சிபான், தூய தோமாவின் கல்., பண்டாரவளை.




ஸனீஹா ஷரீப், மதீனா தே.பாட., சியம்பலாகஸ்கொடுவ.




ஏ. ஸித்தீகா, அல்- பஹ்ரியா மத்.கல்., தொட்டவத்தை.



எஃப். நுஸ்ஹா, நாங்கல்ல மு.ம.வித்., நாங்கல்ல.



எம். பிலால், அரபா தே.பாட., கோட்டகொட.



எம். நஸிக், மத்திய கல்லூரி, ஓட்டமாவடி.



எஃப். ஹனியா, முஸ்லிம் ம.வித்., வெலம்பொட.



எஃப். சமீனா, ஆமினா தே. பாட., மாத்தளை.



எஃப். றிப்கா, ஸாஹிறா மு. ம.வித்., அநுராதபுரம்.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணச்செல்வம்



தினேஷ் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். அவனுடன் படிக்கும் விவேகன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

அழகாபுரி என்ற கிராமத்தில் விவேகனின் தந்தைதான் பெரும் பணக்காரர். தினேஷ், விவேகன் வீட்டின் வழியே பாடசாலைக்குச் செல்லும் போது, நாமும் சம்பாதித்து இதுபோல பணக்காரர் ஆக வேண்டும் என்று நினைத்துக் கொண்டே செல்வான்.

விவேகன் பணக்காரன் என்ற கர்வம் இல்லாமல் அனைவரிடமும் மிக அன்பாகப் பழகுவான். தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு தயங்காமல் உதவிகளைச் செய்வான். அதனால், அவனைச் சுற்றிலும் எப்போதும் மாணவர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்.

"இவனின் அப்பா, பணக்காரர் என்பதால், ஊரில் எல்லோரும் இவர்களை மதிக்கிறார்கள். அதனால்தான், அவரின் மகனையும், இங்கு சுற்றிச் சுற்றி வருகிறார்கள்" என பொறாமையால் தினேஷ் புலம்புவான். இதேவேளை, விவேகனின் எழுத்து மிக அழகாக இருப்பதால், வகுப்பில் அவன் முதல் மதிப்பெண் எடுப்பான். தினேஷ் இரண்டாவது இடம்தான் வருவான்.

ஆண்டிறுதிப் பரீட்சைக்கு இன்னும் 2 மாதங்களே இருந்தன. இதேவேளை, தினேஷிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. இதனால் அவன் 15 நாட்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை.

சிறிது குணமானதும் அவன் பாடசாலைக்குச் சென்றபோது, அனைத்துப் பாடங்களும் புதிதாக இருந்தன. பாடங்கள் எதுவுமே அவனுக்குப் புரியவில்லை. இதைப் புரிந்துகொண்ட விவேகன் "என் வீட்டுக்கு வாடா, எனக்குத் தனிரூம் இருக்கிறது. எந்தத் தொந்தரவும் இல்லாமல் படிக்கலாம். சந்தேகம் ஏதாவது இருந்தால், நான் சொல்லிக் கொடுக்கிறேன்" என்றான்.

தினேஷ் மறுநாள் வேண்டாவெறுப்பாக விவேகனது வீட்டிற்குச் சென்றான்.

தன் மகனுடன் வரும் மாணவனைப் பற்றி விசாரித்தார் விவேகனின் அப்பா சிதம்பரம்.

அவன் தினேஷ் என்று தெரிந்ததும் "உன்னைப் பற்றி விவேகன் நிறையச் சொல்லிருக்கிறான். ஏதாவது உதவி வேண்டும் என்றால் சொல் கண்டிப்பாகச் செய்கிறேன். இப்போதெல்லாம் கம்பியூட்டர் படித்தால்தான் எதிர்காலம் சிறப்பாக அமையும். என் பையனுடன் சேர்த்து பத்துப் பேரைப் படிக்க வைக்கலாம் என்று இருக்கிறேன். நீ நன்றாகப் படிக்கின்ற பையன். நீயும் படிக்கிறாயா?" என்று கேட்டார்.

"சரி" என்று தலையாட்டினான் தினேஷ்.

'இவர்கள் மதிப்பு, மரியாதையுடன் நிம்மதியாக வாழ பொருட்செல்வம் தான் காரணம் என்று நினைத்தேன். அது மட்டுமல்ல; குணச்செல்வமும் தான் காரணம் என்று இப்போது உணர்ந்து கொண்டேன்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டான் தினேஷ்.

அன்று முதல் இவர்களைப் போல, செல்வத்தைப் பெற்று பொறாமையின்றி நிம்மதியாக வாழவேண்டும் என்று தினேஷ் முடிவு செய்தான்.

# புண்ணியம்



சுற்றத்தார், நண்பர்களின் வருகையால் அந்தக் கல்யாண மண்டபம் களைகட்டியிருந்தது. மேள, தாளங்கள் முழங்க திருமணம் தடல்புடலாக நடந்து கொண்டிருந்தது. பிற்பகலில் திருமணம் முடிந்து சாப்பாட்டுப் பந்தியும் முடிந்து மண்டபமே காலியானது. மணப்பெண்ணின் அப்பா குப்புசாமி, மண்டபப் பொறுப்பாளரிடம் கணக்கை முடித்துவிட்டுச் சாப்பிடும் இடத்திற்கு வந்தார்.

அங்கே, சாப்பாட்டு இலை எடுப்பவர்கள் நிற்பதைக் கண்டார். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலியைக் கொடுத்துவிட்டு, அவர்களையும் சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கூறினார்.

ஆனால், அவர்களுக்கு உணவு பரிமாற ஆட்கள் யாரும் அங்கு இருக்கவில்லை. இதனால், அங்கு நின்றுகொண்டிருந்த குப்புசாமியின் பத்து வயது மகன் குமரன், "நீங்கள் எல்லோரும் இப்படி வந்து உட்காருங்கள், நான் பரிமாறுகிறேன்" என்று கூறினான்.

அவர்களும் தரையில் அமர்ந்தனர். அவர்களுக்கு வாழையிலை போட்டு, அறுசுவை உணவைப் பரிமாறினான் குமரன்.

அந்த இடத்திற்கு குமரனைத் தேடி வந்தான், அவனது அத்தை மகன் பாபு, குமரனின் செயலை அவன் அருவருப்பாகப் பார்த்தான்.

"நாம் எவ்வளவு பெரிய பணக்காரர்கள்! எச்சில் இலைகளை எடுக்கும் இந்த வேலைக்காரர்களுக்கு உணவு பரிமாறிக்கொண்டு இருக்கிறாயே? உனக்கே இது சரியாகத் தெரிகிறதா குமரா?" என்று கேட்டேவிட்டான்.

"சோறு போடுவது புண்ணியம்தானே பாபு. அதைவிட, சாப்பிட்டவர்கள் விட்டுச்சென்ற எச்சில் இலைகளைப் பொறுக்குபவர்களுக்கு சாதி, மத, இன வேறுபாடு பார்க்காமல், உணவு பரிமாறுவது பெரிய புண்ணியம்" என்றான் குமரன். அவன் சொல்வதில் உள்ள உண்மைகளைப் புரிந்து கொண்ட பாபு குமரனுடன் சேர்ந்து உணவு பரிமாறத் தொடங்கினான்.

# கற்க கசடற

ராமு ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் மாணவன். வகுப்பில் எப்போதும் முதல் மாணவனாகவே வருவான். தினமும் நான்கு மணி நேரம் படிக்கும் அவன் பரீட்சை நாட்களில் மேலும் நிறையப் படிக்க வேண்டியிருக்கிறதே என்று அதிக நேரம் உட்கார்ந்து படிப்பான்.

ஒரு நாள் ராமு விஞ்ஞானப் பாடம் படித்துக் கொண்டிருந்தான். அப்போது, அவனது அப்பாவின் நண்பர் ராமநாதன் ராமுவின் வீட்டிற்கு வந்தார். அவர் பாடசாலையொன்றில் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். ராமுவின் அம்மா ராமநாதனைப் பார்த்ததும் " வாருங்கள் வாருங்கள்" என்று வரவேற்றார்.

சோபாவில் அமர்ந்திருந்த ராமநாதன் ராமுவைப் பார்த்து, "ராமு உன் அப்பா எப்போது வருவார்?" என்று கேட்டார்.

"இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்" என்று கூறிவிட்டுப் படிப்பில் மூழ்கினான் ராமு.

"அவனிடம் என்ன வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறாய்" என்று ராமநாதன் கேட்டார்.

"9 ஆம் வகுப்பு" என்று பதில் கூறினான் ராமு.

"சரி இப்போது என்ன புத்தகம் படிக்கிறாய்?"

"விஞ்ஞானம்"

"அப்படியா? காந்த சக்தி எவ்வாறு உருவாகிறது சொல் பார்ப்போம்?" என்றார் ராமநாதன்.

"நான் அதை எட்டாம் வகுப்பிலேயே படித்து விட்டேன். இப்போது ஞாபகத்துக்கு வரவில்லை" என்று கூறியபடி ராமு படிப்பைத் தொடர்ந்தான். அப்போதுதான் அவன் எதையும் சரியாகப் புரிந்து படிக்கவில்லை. மனப்பாடம் செய்கிறான் என்று ராமநாதனுக்குப் புரிந்து. பின்னர் அவனை அக்கறையோடு



அழைத்து, "நீ எதற்காகப் படிக்கிறாய்?" என்று கேட்டார்.

"அதிக புள்ளிகள் வாங்கி, பல்கலைக்கழகம் சென்று, நல்ல தொழிலில் சேர்ந்து கைநிறையச் சம்பாதிக்க வேண்டும். அதற்குத்தான்" என்றான்.

உடனே அவர் சிரித்துக்கொண்டே "ராமு நீ சொல்வது சரிதான். ஆனால், முதலில் நீ உன் அறிவை வளர்த்துக் கொள்ளப் படிக்கவேண்டும். ஒரு பாடத்தைப் படிக்கும்போது அதன் பொருளை உணர்ந்து படிக்கின்றோமா? நடைமுறை வாழ்க்கைக்கும் நம் படிப்பிற்கும் என்ன பயன் உள்ளது? நாம் படிப்பதை எப்படிப் பயன்படுத்துகிறோம்? என்று பலவாறு உனக்குள் கேள்விகளைத் கேட்டுப் படிக்கவேண்டும். ஆசிரியரிடம் பாடங்கள் குறித்து எந்த சந்தேகம் இருந்தாலும் உடனுக்குடன் வெட்கப்படாமல் அச்சமின்றிக் கேட்டுத் தெளிவு பெறவேண்டும்" என்று விளக்கம் கொடுத்தார்.

அப்போதுதான் ராமுவிற்குத் தான் படிக்கும் விதம் தவறு என்பது புரிந்தது.

அன்று முதல் ஆசிரியரிடம் சின்னச் சின்ன சந்தேகங்கள் என்றாலும், வெட்கப்படாமல் அச்சமின்றி அவ்வப்போது கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டான்.

இப்போது அவனுக்கு கற்பது கடினமாக இருக்கவில்லை. மாறாக, தினமும் பல புதிய விடயங்களைக் கற்றுக் கொள்கிறோம் என்று மகிழ்ந்தான். இதனால், படிப்பில் அவனுக்கு ஆர்வம் மிகுந்தது. பல கேள்விகள் அவனுக்குள் உருவாகின. நாம் ஏன் இதை வேறு விதத்தில் செய்யக்கூடாது என்பது போன்ற பல புதிய சிந்தனைகள் அவனுக்குள் உருவாகின. அதுவே பிற்காலத்தில் அவனை பல புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்கத் தூண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் வீட்டார்களுக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

**දුව: මාමේ! හෙට අපිව පේරාදෙණිය මල්වත්තට එක්කගෙන යනවාද?**
மாமே! ஹெட்ட அப்பிவ பேராதெனிய மல்வத்தட்ட எக்கஹென யனவாத?
மகள்: **மாமா! நாளை எங்களைப் பேராதனைப் பூங்காவிற்கு அழைத்துச் செல்வீர்களா?**

**මාමා: හා දුව, අපි සේරම හෙට යමු.**
ஹா துவ, அப்பி சேரம ஹெட்ட யமு.
மாமா: **நல்லது மகள், நாங்கள் எல்லோரும் நாளை போவோம்.**

**අම්මා: මමත් ගොඩක් දවසකින් මල්වත්තට ගියේ නැහැ.**
மமத் கொடக் தவசகின் மல்வத்தட்ட கியே நெஹெ.
அம்மா: **நானும் நீண்ட நாட்களாகப் பூங்காவிற்குப் போனதில்லை.**

**මාමා: එහෙනම් අපි හෙට උදේම දළදා මාළිගාවට ගිහින් මල් වත්තට යමු.**
எஹெனம் அப்பி ஹெட்ட உதேம தலதா மாளிகாவட்ட கிஹின் மல்வத்தட்ட யமு.
மாமா: **அப்படியானால் நாங்கள் நாளை காலையிலேயே தலதா மாளிகைக்குப் போய்விட்டு பூங்காவிற்குப் போவோம்.**

**තාත්තා: ඒක හොඳයි.**
ஏக்க ஹொந்தய்.
அப்பா: **அது நல்லது.**

**දුව: මම දළදා මාළිගාවට යන්න හරි ආසයි.**
மம தலதா மாளிகாவட்ட யன்ன ஹறி ஆஸய்.
மகள்: **தலதா மாளிகைக்குப் போக எனக்கு மிகவும் விருப்பம்.**

**තාත්තා: අපි දවල්ට කෑමත් හදාගෙනම යමු.**
அப்பி தவல்ட்ட கேமத் ஹதாகெனம யமு.
அப்பா: **நாங்கள் பகல் சப்பாடும் செய்து எடுத்துக்கொண்டே போவோம்.**

**මාමා: ඔව් ඒක හොඳයි. කඩ කෑම කන්න ඕනේ නැහැ.**
ஒவ் ஏக்க ஹொந்தய். கட கேம கன்ன ஓனே நெஹெ.
மாமா: **ஆம் அது நல்லது. கடையுணவு சாப்பிடத் தேவையில்லை.**

**අක්කා: අම්මේ! කෙසෙල් කොළවල බත් බඳින්න.**
அம்மே! கெஸெல் கொளவல பத் பதின்ன.
அக்கா: **அம்மா! வாழை இலைகளில் சோறு கட்டுங்கள்.**

**නැන්දා: එහෙනම් හෙට උදේම නැගිටල උයමු.**
எஹெனம் ஹெட்ட உதேம நெகிட்டல உயமு.
மாமி: **அப்படியென்றால் நாளை காலையிலேயே எழுந்து சமைப்போம்.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. பூங்காவிற்கு அழைத்துச் செல்வீர்களா?
..........................................................................
ii. நாளை காலையிலேயே பூங்காவிற்குப் போவோம்.
..........................................................................
iii. கடையுணவு சாப்பிடத் தேவையில்லை.
..........................................................................






**'As' எனும் இணைக்கும் சொற்களைச் (Joining Word) கையாண்டு, ஒன்றிணைக்கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) இங்கே பயில்வோம்.**

(அ) ராஜுவிடம் பணம் இல்லாததால், அவனால் எனக்கு செலுத்த முடியவில்லை.
As Raju had no money, he couldn't pay me.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- ராஜுவிடம் பணம் இல்லாததால்,
As Raju had no money,
(துணை வாக்கியப் பகுதி - Subordinate Clause)

- அவனால் எனக்கு செலுத்த முடியவில்லை.
He couldn't pay me.
(பிரதம வாக்கியப் பகுதி - Principal Clause)

(ஆ) லலிதா சுகவீனமாக இருந்ததால், வீட்டில் தங்கியிருந்தாள்.
As Lalitha was sick, she stayed at home.
(கலப்பு வாக்கியம் - Complex Sentence)

- லலிதா சுகவீனமாக இருந்ததால்,
As Lalitha was sick,
(துணை வாக்கியப் பகுதி - Subordinate Clause)

- அவள் வீட்டில் தங்கியிருந்தாள்.
She stayed at home.
(பிரதம வாக்கியப் பகுதி - Principal Clause)

(இ) நீ நினைப்பது போன்று, குமார் மிகவும் கெட்டிக்காரன் அல்லன்.
Kumar is not so clever as you think.
(கலப்பு வாக்கியம் - Complex Sentence)

- நீ நினைப்பது போன்று,
As you think,
(துணை வாக்கியப் பகுதி - Subordinate Clause)

- குமார் மிகவும் கெட்டிக்காரன் அல்லன்.
Kumar is not clever.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஈ) சுஜாதா அங்கு இல்லாததால், நான் அவளுடைய சகோதரியுடன் கதைத்தேன்.
As Sujatha was not there, I spoke to her sister.
(கலப்பு வாக்கியம் - Complex Sentence)

- சுஜாதா அங்கு இல்லாததால்,
As Sujatha was not there,
(துணை வாக்கியப் பகுதி - Subordinate Clause)

- நான் அவளுடைய சகோதரியுடன் கதைத்தேன்.
I spoke to her sister..
(பிரதம வாக்கியப் பகுதி - Principal Clause)

(உ) ரஞ்ஜன் நாகபாம்பைக் கண்டவுடன், அப்பால் ஓடினான்.
As soon as Ranjan saw the cobra, he ran away.
(கலப்பு வாக்கியம் - Complex Sentence)

- ரஞ்ஜன் நாகபாம்பைக் கண்டவுடன்,
As soon as Ranjan saw the cobra,
(துணை வாக்கியப் பகுதி - Subordinate Clause)

- அவன் அப்பால் ஓடினான்.
He ran away.
(பிரதம வாக்கியப் பகுதி - Principal Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்

✱ ஐக்கிய அமெரிக்காவில் பெற்றோலுடன் ஒருவகையான பொருளைக் கலந்து பாவித்தமையால், 2 இலட்சம் பீப்பாய் எண்ணெய் தேவை குறைந்தது. அவ்வாறு கலக்கப்பட்ட பொருள் என்ன?

**எத்தனோல்**



✱ 46664 என்ற வங்கிக்கணக்கு இலக்கம் உலகப் புகழ் பெற்றது. இந்த வங்கிக் கணக்கிற்கு உலகில் அனைத்துப் பாகங்களிலிருந்தும் பணம் அனுப்புகின்றனர். இது ஒரு முன்னாள் சிறைக்கைதியின், சிறைச்சாலை இலக்கமாகும். அவரின் பெயர் என்ன?

**நெல்சன் மண்டேலா**



✱ ஈக்வடோர் நாட்டின் தலைநகரம் எது?

**குவிட்டடோ**

✱ இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது முஸ்லிம் பள்ளிவாசல் எது?

**பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார்**



✱ சுனாமி என்பது எந்த மொழிச்சொல்?

**ஜப்பான்**




✱ ரொபர்ட் எட்வர்ட் என்பவர் இங்கிலாந்தில் 1978 இல் செய்த ஆய்வுக்காக 2010 இல் அவருக்கு 'நொபெல்' பரிசு வழங்கப்பட்டது. அவர் நிகழ்த்திய ஆய்வு என்ன?

**சோதனைக் குழந்தை தொடர்பான ஆய்வு**



✱ இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் முதலில் நிர்மாணிக்கப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் எது?

**கல்லோயா திட்டம்**




✱ இஸ்லாமியர் களுக்கு அல்-குர்ஆன், கிறிஸ்தவர்களுக்கு பைபிள், அதேபோன்று சீக்கியர்களுக்கு உரித்தான சமய நூல் எது?

**கிரந்த சாகிப்**

✱ தமிழ் நாடகத்துறையின் முன்னோடி என போற்றப்படுபவர் யார்?

**தவத்திரு சங்கரதாஸ்சுவாமிகள்**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

# ஈராக்கில் போரிட்ட இராணுவ வீரர்களுக்கு ஒபாமா விருந்து





ஈராக்கில் நடைபெற்ற போரின்போது, அங்கு கடமையாற்றிய இராணுவ வீரர்களுக்கு வெள்ளை மாளிகையில் விருந்தளிக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, பெப்ரவரி 29 ஆம் திகதியன்று ஜனாதிபதி ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்சேல் ஆகியோர் இந்த விருந்தை அளிக்கவுள்ளனர். போரின்போது குறிப்பிடத்தக்க வீரச் செயல்களைப் புரிந்த இராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவுக்கவும் பாராட்டுத் தெரிவிக்கவுமே இந்த விருந்துபசாரம் நடைபெறவிருப்பதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. மேலும், இந்த விருந்து நிகழ்வில் இராணுவத்தினர் சீருடையிலேயே கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து, கருத்துத் தெரிவித்துள்ள முப்படைகளின் கூட்டுத்தளபதி மார்டின் டெம்ப்ஸ், ஈராக்கின் விடுதலைக்காக நடத்தப்பட்ட 'புதிய விடியல்' எனும் போர் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரைப் பாராட்டும் வகையில் நடத்தப்படவுள்ள இந்த விருந்தில் கலந்து கொள்ள இருக்கின்ற இராணுவ வீரர்கள் ஈராக்கில் சுதந்திரமான, அமைதியான சூழலை ஏற்படுத்த உதவியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# ரோமானிய பிரதமர் பதவி விலகினார்



ரோமானியா நாட்டின் பிரதமர் எமில் பொக் தமது பதவியிலிருந்து விலகியுள்ளார். இவரது பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களையடுத்தே, அவர் பதவி விலகியுள்ளார். இதுதொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் எமில், நாட்டில் நிலவும் பதற்ற சூழ்நிலையை தணிப்பதற்காகவே தாம் பதவி விலகுவதாகவும் தெரிவித்தார்.

ஊழியர்களின் சம்பளங்களை 25 வீதத்தால் குறைப்பதுடன், ஓய்வூதியங்களை முடக்கிவிடவும் பிரதமர் திட்டமிட்டதையடுத்து எழுந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவே, அவர் பதவி விலக வேண்டிய நிலை தோன்றியதாக குறிப்பிடப்படுகின்றது.



## அற்லஸ் கேள்வி - 348

**கேள்வி:** பதவி விலகிய ரோமானிய நாட்டு பிரதமரின் பெயர் என்ன?

**சரியான விடை..................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 348, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 346 இன் சரியான விடை: கரீபியன்**

**பரிசு பெறுவோர்**

ஹனாஸ் அஹமட்,
யோனகபுர,
திக்வெல்லை.

இல்மா மர்யம்,
தொடங்கொள்ள, அக்குறணை.

ஆக்கில் ஷிஹாப்,
அம்பாறை வீதி, சம்மாந்துறை.

# ஈரான் இராணுவத்தின் துணைத்தளபதி எச்சரிக்கை



"அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் அதற்கு தக்க பதிலடியை ஈரான் வழங்கும்" என்று அந்நாட்டின் இராணுவத்துறை தெரிவித்துள்ளது. ஈரான் மேற்கொண்டுவரும் அணுசக்தி திட்டங்கள் தொடர்பாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பலத்த சந்தேகங்களை வெளியிட்டு வருவதுடன், ஈரான் மீது பொருளாதார தடைகளையும் நடைமுறைப் படுத்தி வருகின்றன.



இத்தகைய பின்னணியிலேயே சில தினங்களுக்கு முன்னர் ஈரான் இராணுவம் போர் ஒத்திகையொன்றை நடத்தியிருந்தது. இதனையொட்டி கருத்துத் தெரிவிக்கையிலேயே ஈரான் இராணுவத்தின் ஒரு பிரிவான ஈரான் புரட்சிப் படையின் துணைத்தளபதியான உசேன் சலாமி அமெரிக்கா உட்பட, அதன் நேச நாடுகளுக்கு முன் குறிப்பிட்டவாறு எச்சரிக்கை செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கான முயற்சிகள்







2017ஆம்ஆண்டில் நடைபெறவுள்ள ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கான அனுமதி கோரும் கடிதம் தயாரிக்கப்பட்டிருப்பதாக இலங்கையின் தேசிய ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் ஹேமசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இந்த விண்ணப்பக் கடிதம் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிய ஒலிம்பிக் சங்கத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

மேற்படி,போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கான அனுமதி அநேகமாக 95 வீதம் சாதகமாக இருப்பதாகவே ஹேமசிறி அவர்கள் தெரிவித்துள்ளார். ''உலக சனத்தொகையில் 2/3 பங்கினர் ஆசிய நாட்டினராக இருப்பதனாலேயே இலங்கையில் ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு செலவிடக் கூடிய நிதியில் பத்தில் ஒரு பங்கு நிதி மாத்திரமே மேற்படி ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு செலவிட வேண்டியிருக்கும்.

எனவே, ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளும் போட்டியிட வேண்டி உள்ளபோதிலும் இலங்கை இது தொடர்பாக ஆர்வம் செலுத்துமாயின், இலங்கைக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு அந்நாடுகள் உறுதி அளித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

முதலாவது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் சிங்கப்பூரில் 2009 ஆம் ஆண்டில் நடைபெற்றமையும் இதில் மூன்றாவது போட்டிகளே 2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சுழற்சி முறையில் வீரர்களை மாற்றுவது ஏற்புடையதல்ல

## -கவாஸ்கர்



இந்திய அணியின் தேர்வுக் குழுவினர் 2015 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ணப் போட்டிகளை மட்டும் இலக்காகக்கொண்டு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை நேரத்திற்கு நேரம் மாற்றி ஓய்வு வழங்குவதானது, ஏற்புடையதல்ல என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், சுழற்சி முறை என்ற அடிப்படையில் வீரர்களை மாற்றுவதென்பது வீரர்கள் போதிய உடற்தகுதியுடன் இல்லை என்பதை உணர்த்துவதாகவே உள்ளது. தொடர்ந்து எட்டுப் போட்டிகளில் விளையாடினாலும்கூட, அவர்களுக்குத் தொடர்ந்தும் விளையாட வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படி அல்லாமல் சுழற்சி முறையில் வீரர்களை மாற்றுகின்றனரென்றால் வீரர்களுக்கு ஓய்வு அளிப்பதிலேயே தேர்வாளர்கள் அதிக முக்கியத்துவத்தை வழங்குகின்றனர் என்பதையே காட்டுகின்றது. அதுமட்டுமன்றி; உலகக் கிண்ணத்தை இலக்காகக்கொண்டுதான் வீரர்கள் மாற்றப்படுகின்றனர் என்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# அஜ்மலின் பந்துவீச்சு சர்ச்சை தொடர்கிறது....!



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சாளரான சயித் அஜ்மல் வீசுகின்ற சுழல் பந்து வீச்சுக் குறித்து ஏற்பட்டுள்ள சர்ச்சை பலத்த வாதவிவாதங்களைத் தோற்றுவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, பந்து வீசுகையில் முழங்கையின் அளவு 15 டிகிரி கோணத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பது சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறையாகும். ஆனால், பாகிஸ்தான் வீரர் அஜ்மல் மேற்படி விதிமுறைகளுக்கு மாறாக பந்து வீசுவதாக சிலர் குற்றஞ்சாட்டியுள்ளதாலேயே இந்த சர்ச்சை கிளம்பியுள்ளது.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரின்போது 24 விக்கெட்களை வீழ்த்தி உலக கிரிக்கெட் ரசிகர்களின் பார்வையை இவர் தம்வசம் ஈர்த்திருந்தார். இத்தகைய பின்னணியிலேயே, அஜ்மல் மீதான விமர்சனம் எழுந்துள்ளது. இதுகுறித்து, கருத்துத் தெரிவித்துள்ள அஜ்மல் சில வருடங்களுக்கு முன்னர் தனக்கு ஏற்பட்ட விபத்தில் முழங்கையில் காயம் ஏற்பட்டதாகவும் இதனால் தனது கையின் அமைப்பு மாறியதால் ஒரு பந்து வீச்சாளருக்குரிய 23.5 டிகிரி கோணம் வரை முழங்கையை வளைக்க முடியாமல் இருந்ததாகவும் இதனை ஐ.சி.சியிடம் முன்கூட்டியே தெரியப்படுத்தியமையால் அதற்கான அனுமதியை ஐ.சி.சி வழங்கியதாகவும் தனது முழங்கையில் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்காவிட்டால் ஐ.சி.சியின் விதிக்கு உட்பட்டே பந்து வீசியிருப்பேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ஐ.சி.சியின் செய்தித் தொடர்பாளர் அஜ்மலின் கூற்றை மறுத்துள்ளதுடன், அவர் தவறான கருத்தைக் கூறியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஒலிம்பிக் ஆரம்பவிழா இசை நிகழ்ச்சி...!








லண்டனில் இந்த வருடம் ஜூலை மாதம் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இதனையொட்டி மூன்று மணி நேர இசை நிகழ்ச்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரான ஷேக்ஸ்பியரின் 'த டெம்பஸ்ட்' என்ற நாடகத்தை கருவாகக் கொண்டே மேற்படி இசை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் பத்தாயிரம் கலைஞர்கள் பங்கு கொள்ளவுள்ளனர்.

ஒஸ்கார் விருதுபெற்ற 'ஸலம்டோக் மில்லியனர்' என்ற ஹொலிவுட் திரைப் படத்தை இயக்கிய டேனிபாயல்தான் மேற்படி ஆரம்பவிழா நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் வீரர்கள் பேட்டி வழங்கக் கட்டுப்பாடு!




பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் அணியின் முகாமையாளரின் எதிரிலேயே இனிமேல் ஊடகங்களுக்குப் பேட்டியோ, கருத்தோ வழங்க முடியும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளரான அஜ்மல் விதிமுறைகளுக்கு மாறாக பந்து வீசுகின்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்து, அதுகுறித்து பி.பி.சி தொலைக்காட்சி சேவை அஜ்மலிடம் கருத்துக்கேட்டபோது, அதற்காக ஐ.சி.சி சிறப்பு அனுமதி வழங்கியிருப்பதாக அவர் பதிலளித்திருந்தமை பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

விதிமுறைகளை மீறிப் பந்து வீசுவதற்கு ஐ.சி.சி எவரையும் அனுமதிக்காத நிலையில் அஜ்மல் தெரிவித்துள்ள கருத்து ஐ.சி.சி மீது அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதுடன், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் அது இக்கட்டான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே, பாகிஸ்தான் வீரர்கள் தனிப்பட்ட ரீதியில் இனிப் பேட்டி அளிக்க முடியாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கட்டுப்பாடு விதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயிலிருந்து பூமியில் பாறைகள் விழுகின்றன!

## விஞ்ஞானிகள் தகவல்







செவ்வாய்க் கிரகத்தில் இருந்து பூமியின் மீது பாறைகள் விழுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதற்கமைய, அண்மையில் மொரோக்கோ நாட்டின் ஒரு பகுதியிலிருந்து 15 இறாத்தல் எடைகொண்ட பாறைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆய்வு செய்தபோது, அவை கடந்த வருடம் ஜூலை மாதமளவில் செவ்வாய்க் கிரகத்தில் இருந்து பூமியில் விழுந்தவை என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


இதற்கு முன்னர், 1962 ஆம் ஆண்டு இவற்றையொத்த பாறைகள் பூமியில் விழுந்துள்ளன. அத்துடன், மொரோக்கோவில் விழுந்த மேற்படி பாறைத்துண்டுகளுக்கு தங்கத்தைவிட 10 மடங்கு அதிகமாக விலை மதிப்பிடப்பட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்தில் இருந்து விழுந்த பாறைத் துண்டுகள் என்பதனாலேயே, இவற்றுக்கு அதிகூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட விண்கலங்கள் எதுவும் இதுவரை அங்கிருந்து மண் மாதிரிகளையோ பாறைத்துண்டுகளையோ எடுத்துவராத நிலையில், அங்கிருக்கும் பாறைத்துண்டுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே வழியாக இது காணப்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மொரோக்கோவில் விழுந்த இந்த பாறைத்துண்டுகளில் மிகப் பெரிய கல்லானது, சுமார் 2 இறாத்தல் நிறையுடையது என விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தில் இருந்து இவ்வாறு பாறைகள் விழுவது இது ஐந்தாவது தடவையாகும். விண்கல் நிபுணர்கள் மற்றும் நாஸா விஞ்ஞானிகள் அடங்கிய குழுவொன்று இந்தப் பாறைகளை ஆய்வு செய்ததில், அவை செவ்வாய்க் கிரகத்திலிருந்து விழுந்தவைதான் என உறுதி செய்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கு சாத்தியமான சூழல் உள்ளதா? என்பது குறித்து ஆய்வுகளை நடத்தி வரும் இந்த வேளையில், செவ்வாயிலிருந்து இவ்வாறு பாறைத்துண்டுகள் விழுவது ஒரு முக்கிய திருப்பமாகும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.


# ஐரோப்பாவின் 'ப்ளாங்க்' விண்வெளித் திட்டம் முடிவுக்கு வருகிறது






பெரு வெடிப்பின் எச்சக் கதிர்வீச்சை ஆராய்ந்திடவும் பிரபஞ்சத்தின் மிகப் பழமையான ஒளியைப் பற்றி அறிந்து கொள்ளும் நோக்கிலும் விண்ணுக்கு அனுப்பப்பட்ட ஐரோப்பாவின் 'ப்ளாங்க்' விண்வெளித் திட்டமானது, முடிவுக்கு வருவதாக ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம் அறிவித்துள்ளது. ப்ளாங்க் விண் தொலைநோக்கியின் செயற்பாட்டுக்காகப் பொருத்தப்பட்டுள்ள இயந்திரத்தில் ஹீலியம் குளிர்விப்பு குறைந்து வருவதையடுத்தே, இத்திட்டம் முடிவுக்கு வருவதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இனிவரும் சில நாட்களில் இந்த தொலைநோக்கியானது, உறைந்த நிலையிலிருந்து வெப்பமடைந்து - செயல் இழந்து விடும் என ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின்




விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு விண்ணுக்கு ஏவப்பட்ட ப்ளாங்க் விண் தொலைநோக்கியானது, தனது சேவைக் காலத்தில் ஏராளமான தகவல்களையும் புகைப்படங்களையும் பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது. இது குறித்து ஐரோப்பிய முகவர் நிலையத்தின் ப்ளாங்க் திட்ட விஞ்ஞானியான ஜான் டோபர் கருத்துத் தெரிவிக்கையில்:

"நாம் எதிர்பார்த்ததைவிட, ஏராளமான தகவல்களை ப்ளாங்க் விண் தொலைநோக்கியூடாகப் பெற்றுள்ளோம். அத்துடன், மேலும் ஓராண்டு காலத்துக்குள் இத்தகவல்களை வைத்து பிரபஞ்சத்தின் மிகப் பழமையான ஒளி தொடர்பான தகவல்களையும் வரைபடங்களையும் ஆய்வுக்கட்டுரைகளையும் நாம் சமர்ப்பிக்கவுள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

பெரு வெடிப்பின் எச்சக் கதிர் வீச்சை ஆராய்ந்திடவும் பிரபஞ்சத்தின் மிகப் பழமையான ஒளியைப் பற்றி அறிந்துகொள்ளும் நோக்கிலும் செயற்படுத்தப்பட்ட முதலாவது விண்வெளித் திட்டமே இந்த 'ப்ளாங்க் திட்டம்' ஆகும். அதற்கமைய, அண்டத்தின் தோற்றம் மற்றும் பரிணாமம் என்பன குறித்த வானியலாளர்களின் கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இந்த ப்ளாங்க் விண்வெளித் திட்டம் உதவக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# சூரிய மண்டலத்திற்கு வெளியே வேற்றுலகத் துணிக்கைகள் கண்டுபிடிப்பு

எமது சூரிய மண்டலத்திற்கு சற்று வெளியே வேற்றுலகத் துணிக்கைகளை நாஸாவின் 'ஐபெக்ஸ்' (IBEX) விண்கலம் முதற்தடவையாகக் கண்டுபிடித்துள்ளது.

இது குறித்து நாஸாவின் ஆய்வாளரான டேவிட் மெக் கோமஸ் கருத்துத் தெரிவிக்கையில்: "இந்தத் துணிக்கைகள் விண்மீன்கள், கோள் மற்றும் உயிரினத்தால் ஆக்கப்பட்டு இருக்கலாம். எனவே, இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வது மிக முக்கியமானதாகும். எமது சூரிய மண்டலத்திற்குள் உள்ள பொருட்களைவிட, இவை பெரிதும் வேறுபட்டுள்ளன" என்றார்.

ஐபெக்ஸ் விண்கலமானது, 2008 ஆம் ஆண்டு எமது சூரிய மண்டலத்திற்கும் பிரபஞ்சத்திற்குமான எல்லையை வரைபடமாக உருவாக்கும் திட்டத்திற்கமைய, நாஸாவினால் விண்ணுக்கு ஏவப்பட்டது. அது தவிர, இந்த விண்கலத்தினூடாக, விண்வெளியில் பல முக்கிய ஆய்வுகளையும் நாஸா மேற்கொண்டுள்ளது. அத்துடன், 2009 ஆம் ஆண்டில் பூமியின் காந்தக் கோளத்தில் சூரியப்புயல் மோதுவதை இந்த விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள கெமரா படம் பிடித்து அனுப்பியதன்மூலம், சூரியனிலிருந்து மணிக்கு மில்லியன் மைல்கள் வேகத்தில் செல்லும் மர்மமான மின்னூட்டத் துகள்கள் பற்றி கண்டறியக் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்:

## பொருளாதாரம் - வங்கித்துறை



# அமேடியோ பீட்டர் கியானினி

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டாக உலகின் பிரசித்தி பெற்ற வங்கியாகத் திகழ்கின்ற 'பேங்க் ஒஃப் அமெரிக்கா' (Bank of America) என்கின்ற வங்கியை உருவாக்கியவர் அமேடியோ பீட்டர் கியானினி ஆவார். இவரின் மிகப்பெரிய சாதனை என்னவென்றால், மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, இத்தகைய வங்கியை ஆரம்பித்து வெற்றி பெற்றமையாகும்.

அக்காலகட்டத்தில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கியானினியின் பெற்றோர் வறுமையின் காரணமாக பிழைப்புத்தேடி அமெரிக்காவில் குடியேறினர். அங்கு சிறிய அளவில் உணவகத்தை ஆரம்பிக்க அது அமோக வளர்ச்சி பெற்றது. தொடர்ந்து விவசாயத்தொழிலில் ஈடுபட்டு அதிக பணம் சேகரித்தனர். எனினும், துரதிர்ஷ்டவசமாக கியானினியின் தந்தை ஒரு யுத்தத்தில் கொல்லப்பட்டார். ஏழ்மை அவர்களை மீண்டும் சூழ, ஒரு சிறிய கடையில் வேலைக்கு அமர்ந்த கியானினி பின் அங்கிருந்து வெளியேறி ஒரு சிறு வங்கியில் இணைந்தார். இங்குதான் அவருக்கு வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது.

அந்த வங்கியில் ஏழை, மத்திய வர்க்க மக்களுக்கு அனுமதி கிடையாது. பெரும் பணக்காரர்கள் மட்டும்தான் வாடிக்கையாளர்கள். அவர்களுக்கு மட்டுமே கடன் வசதிகள் வழங்கப்பட்டன. இது கியானினிக்குப் புரியாத புதிராக இருந்தது. பணக்காரர்களுக்கு பண உதவி செய்வதில் என்ன பயன்? ஏழை மக்களுக்கும் பணத்தேவை உள்ளவர்களுக்கும் அல்லவா பண உதவி செய்ய வேண்டும். அப்பொழுது அவர்களும் முன்னேறுவார்கள். வங்கிக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள் என்று நினைத்தார். அவரின் இவ்வாறான மாறுபட்ட சிந்தனைக்கு பல காரணங்கள் இருந்தன. அக்காலத்தில் அமெரிக்காவுக்குப் பிழைப்புத் தேடி பல நாட்டு மக்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் பணம் இல்லாமையால் தொழில்களை ஆரம்பிக்க முடியாமல் இருந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம், அவர்களுடைய பொருளாதாரமும் நிறைவடையும். வங்கியும் வளர்ச்சி பெறும் என்று கருதினார்.

அவர் வேலை செய்த வங்கியில் அதற்கு வாய்ப்பில்லை என்பதால், தன் கையிலிருந்த சிறிதளவு பணத்தைக்கொண்டு சிறிய அளவில் 1902 இல் ஒரு வங்கியை ஆரம்பித்தார். வெளிநாடுகளில் இருந்து குடியேறும் மக்கள் அதில் வாடிக்கையாளர்களானார்கள். அவர்கள் அனைவருக்கும் ஏனைய வங்கிகள் உதவாத நிலையில் கியானினியின் இந்த வங்கி உதவியதால், அது மக்களிடையே பிரபல்யம் பெற்றது. ஆரம்பித்த சில வருடங்களிலேயே வங்கியில் முதலீடு செய்யப்பட்ட பணம் பத்து லட்சம் டொலரைத் தொட்டது. குடியேறியவர்கள் மட்டுமல்ல; பணத்தேவை உள்ள அமெரிக்க மக்களும்கூட, அவரது வங்கியைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதன்பின் கியானினியின் இத்தகைய கொள்கையை காலத்தின் கட்டாயமாக ஏனைய வங்கிகளும் பின்பற்றத் தொடங்கின.

ஆர்.ஜே

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4506

வே.கேஷனியா,
கல்லூரி வீதி,
பண்டாரவளை.



அங்.இல: 4507

ஏ.எம்.ஜிம்ஸான்,
பாக்கியா வீதி,
மருதமுனை.



அங்.இல: 4508

தீ.மு.அறபா,
கொமெனி வீதி,
வாழைச்சேனை-04.



அங்.இல: 4509

ப.யாழினி,
சிவன் கோவிலடி,
புத்தூர்.



அங்.இல: 4510

ம.பிறேமியன்,
கண்டல்,
முருங்கன்.



அங்.இல: 4511

கே.எப்.றிஸ்வியா,
பூலாச்சேனை,
நுரைச்சோலை.



அங்.இல: 4512

ப.பிரணவன்,
செம்மணி வீதி,
நல்லூர்.



அங்.இல: 4513

றசூல் முஸைன் ஜான்,
குறிஞ்சாக்கேணி - 03,
கிண்ணியா.



அங்.இல: 4514

எம்.ஜெயகாந்தன்,
கிளிநொச்சி.



அங்.இல: 4515

எம்.ஸப்ராஸ்,
யாவத்தை,
பேருவளை.

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:......................................

முகவரி:......................................

......................................

பாடசாலை:......................................

வகுப்பு:......................................

திகதி: ......................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

# 'அல்பினோ' என்றால் என்ன?





சிலர் பார்ப்பதற்கு ரோஸ் நிறத்தில் இருப்பார்கள். அவர்களின் தலைமுடிகூட நிறம் மாறிப்போய் காணப்படும். அதற்கு தோலில் உள்ள மெலனின் எனும் நிறமியின் குறைபாடே காரணமாகின்றது. இதனால், பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண சூரிய ஒளியைக்கூடத் தாங்க முடியாதவர்களாகவே இருப்பார்கள். ஆனால், கறுப்பாக இருப்பவர்கள் எவ்வளவு நேரம் வெயிலில் நின்றாலும் அது அவர்களுக்குப் பாதிப்பாக அமைவதில்லை. இதற்கும் இந்த மெலனி நிறமிதான் காரணம். இந்த மெலனின் நிறமியில் குறைபாடு உண்டாகும் போதுதான் 'அல்பினோ' எனும் நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் விலங்குகளுக்கும்கூட, ஏற்படுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**190 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்த டைனோசர் முட்டைகளின் இருப்பகம் ஒன்று ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் 340 முட்டைகள் வரை காணப்பட்டன. இதுவரை உலகில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் தொன்மை வாய்ந்த முட்டைகளின் இருப்பகம் இதுவே என்றும் கூறப்படுகின்றது. டைனோசர்களின் முட்டை இடும் முறை, அவற்றின் இனப்பெருக்க பழக்கங்கள் குறித்து ஆராய்ந்து அறிவதற்கான மிகச்சிறந்த சந்தர்ப்பம் இதன்மூலம் கிடைத்துள்ளதாக விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்**





# 190 மில்லியன் வருடங்கள் தொன்மையான 340 முட்டைகள்

## முட்டையின் இருப்பகம்

இவ்வாறு பெருந்தொகையான முட்டைகள் கிடைத்த இடமானது, தென்ஆபிரிக்காவின் ஜோஹென்னஸ்பர்க் நகரில் இருந்து சுமார் 350 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கோல்டன் கேட் ஹைலண்ட்ஸ் தேசிய பூங்காவில் (Golden Gate Highlands National Park)) அமைந்துள்ளது. இந்த இடத்திலுள்ள சில கூடுகளில் 'மெசொஸ்பொன்டிலஸ்' எனும் வகையைச் சார்ந்த டைனோசர்கள் முட்டைகளை இட்டுள்ளன. அத்தோடு, டைனோசர்களின் எச்சங்களும் அடையாளங்களும் பெருமளவில் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தகைய கண்டுபிடிப்புக்கு அமைவாக, விஞ்ஞானிகள் சில வியப்பிற்குரிய தகவல்களையும் வெளியிட்டுள்ளனர். அதற்கமைய, முட்டைகள் இட்டபின் அவற்றை அடைகாத்து, குஞ்சுகள் வெளிவந்து அவை வளர்ந்த பின்னரும் மறுபடி முட்டைகளை இடுவதற்கு முன்னர் முட்டை இட்ட அதே இடத்திற்கு தாய் டைனோஸர்கள் வந்து போயிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கனடாவின் ஒன்டாரியோ ரோயல் அரும்பொருள் காட்சிகயத்தின் புவிச்சரித தொல்பொருள் நிபுணரான (பாறைப்படைப் பொருள் குறித்த விஞ்ஞானம்) டேவிட் எவன்ஸ் இதுகுறித்து விளக்கமளிக்கையில், ''டைனோசர்களின் எச்சங்கள் எமக்கு இதற்கு முன்பும் கிடைத்துள்ளன. எனினும், அவற்றின் இனப்பெருக்க உயிரியல் சம்பந்தமான தகவல் மிகமிக அரிதாகவே எம்மிடம் உள்ளன. குறிப்பாக, மிகப்பழைமை வாய்ந்த டைனோசர்களின் முட்டைகள் குறித்து அறிந்து கொள்வதற்கு இது அருமையானதொரு சந்தர்ப்பமாகும்'' என விளக்கமளிக்கின்றார்.



## பரிணாம வளர்ச்சி

''190 மில்லியன் வருடங்கள் பழைமையான இந்த வியப்புக்குரிய கூடுகளைக்கொண்ட தொகுதி எமக்கு முதலாவது தடவையாகப் பல கண்டுபிடிப்புகளுக்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. குறிப்பாக, டைனோசர்களின் பரிணாம வளர்ச்சி மற்றும் ஆரம்ப இனப்பெருக்கம் குறித்தும் அறிந்துகொள்வதற்கு இது மிகச்சிறந்த சந்தர்ப்பமாகும்'' என்கிறார் தொல்பொருள் ஆய்வாளரான பேராசிரியர் றொபர்ட் ரீஸ் அவர்கள்; மேற்படி கருத்தை அவர் 'அபூர்வமான கண்டுபிடிப்புகள்' குறித்து பிரஸ்தாபிக்கையிலேயே தெரிவித்துள்ளார்.

கண்டறியப்பட்ட இந்தக் கூடுகளில் ஒரு கூட்டில் 34 முட்டைகள் வீதம் அருகருகே அடுக்காகக் காணப்பட்டன. சிதைவடைந்த பாறைப் படைகளுக்கிடையே காணப்படும் இந்த எச்சங்கள்மூலம் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. அந்தவகையில் டைனோஸர்கள் கூட்டமாக வந்து ஒரு பிரதேசத்தை தெரிவு செய்து, கூடுகள் அமைத்து முட்டைகள் இட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. பொதுவாக, 6 மீற்றர் அளவு நீளத்தைக்கொண்ட தாய் டைனோஸரின் உடலின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இந்த முட்டைகள் மிகவும் சிறியவை. இங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு முட்டையின் விட்டமானது, 67 சென்ரிமீற்றர் மாத்திரமே ஆகும். இக்கூடுகளில் முட்டைகள் அடுக்காகக் காணப்படும் முறையைப் பார்க்கும்பொழுது முட்டைகள் இட்டபின் தாயானது, அவற்றை தன் அருகில் வைத்திருக்க வேண்டும் என தாம் கருதுவதாக இது குறித்து ஆராய்ந்த றொபர்ட் ரீஸ் கூறுகிறார்.

## மிகத்தொன்மையான கரு

பேராசிரியர் ரீஸ் இதுகுறித்து மேலும் விளக்கமளிக்கையில், ''இந்த முட்டைக் கருக்களும் கூடுகளும் ஒரு மலைச்சரிவுக்கு அருகிலேயே கண்டுபிடிக்கப்பட்டன. மலைப்பிரதேசத்தில் வெட்டப்பட்ட பாதையில் இருந்து 25 மீற்றர் தூரத்தில் உள்ள பாறைச்சரிவுகளிலேயே இவை இருந்தன. இங்கு எமக்கு 10 கூடுகள் கிடைத்தன. இதுபோன்ற மேலும் பெருந்தொகையான கூடுகள் மலை உச்சியில் உள்ள செங்குத்தான சரிவில் இருக்கலாம் என நாம் எண்ணுகிறோம். கால நிலை மற்றும் தரைத்தோற்ற செயற்பாடுகளினால் அவை எதிர்காலத்தில் அழிவடைவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம் என்றே கருதுகிறோம்'' என மேலும் அவர் தெரிவித்தார்.

ஆரம்ப ஜுராசிக் யுகத்தைச் சேர்ந்த சிதைவடைந்த பாறைப்படைகளுக்கிடையேதான் இந்த எச்சங்கள் கிடைத்துள்ளன. 'மொசொஸ்பொன்டிலஸ்' எனும் டைனோஸர் வகையைச் சார்ந்த இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகத்தொன்மையான கருக்களும் இங்குதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த மொசொஸ்பொன்டிலஸ் வகை டைனோஸர்கள் நீளமான கழுத்தினை உடைய தாவர உண்ணியாகும். இது ஜுராசிக் மற்றும் கிரேட்டிசீயான் யுகத்திற்குரிய இராட்சத விலங்கு வகையைச் சார்ந்தது என்றே கூறப்படுகின்றது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரின்ட் ஆவதில் தாமதம் ஏற்படல்...



கணினிப் பாவனையின்போதும் சாதாரண வேர்ட் டொக்யூ மென்ட்டை பிரின்ட் எடுக்க முயற்சிக்கும்போதும் சிலநேரங்களில் அது பிரின்ட் ஆவதற்கு அதிக நேரம் எடுப்பதுண்டு. இதற்கான காரணம் கணினிப் பாவனையாளர் தானாகவே ஏற்படுத்திக்கொண்ட மாறுதலான செட்டிங்ஸ் முறையாக இருக்கலாம். குறிப்பாக, பிரின்டர் செட்டிங்ஸை draft என்ற நிலையிருந்து best என்ற நிலைக்கு மாற்றியிருந்தாலும் இவ்வாறு நடப்பதுண்டு.

குறிப்பாக, சில படங்களைத் தெளிவான பிரின்ட் போடுவதற்காக, இவ்வாறு செட்டிங்ஸை மாற்றி இருக்கலாம். ஆனால், அதனை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றத் தவறுவதால்தான் முன் குறிப்பிட்டவாறு வேர்ட் டொக்யூ மெண்ட்கள் பிரின்ட் ஆவதற்கு தாமதமாவதாக இருக்கலாம். எனவே பழைய நிலைக்கு இதனை மாற்றிப் பிரின்டரை வேகமாக இயக்கச் செய்வதற்கு வேர்ட் தொகுப்பிற்குச் சென்று பிரின்ட் என்ற கட்டளையைக் கொடுத்துப் பின்னர் அதில் புரொபட்டிஸை தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும் கன்ட்ரோல் பெனல் சென்று அதிலுள்ள பிரின்டர்ஸ் என்ட் ஃபெக்ஸஸ் (Printers and faxes) என்ற பிரிவில் கிளிக் செய்யவேண்டும். இதன் போது வரும் பட்டியலில் உங்களது பிரின்டரை தேர்ந்தெடுக்க அதில் ரைட் கிளிக் செய்தவுடன் தோன்றும் பட்டியலில் காணப்படும் properties என்ற பிரிவை தேர்ந்தெடுக்கவேண்டும்.



அல்லது பிரின்டர் என்ற பெயர் உள்ள இடத்தில் மவுஸை வைத்து Alt கியுடன் டபள் கிளிக் செய்யவும். இதனைத் தொடர்ந்து Printing Preferences என்ற பிரிவிற்குச்சென்று பிரின்ட் குவாலிட்டியில் டிராஃப்ட் என்ற பிரிவையும் பேப்பர் என்ற பிரிவையும் தேர்ந்தெடுத்து ஒகே என்பதில் கிளிக் செய்யவும், அப்போது வேர்ட் டொக்கியூமண்டில் விரைவாக பிரின்ட் ஆவதைக் காணலாம்.


# எப்ளிகேஷன் இல்லாமல் ஃபைல்ஸ்களைப் பார்க்கலாம்



ஒரு ஃபைலில் என்ன உள்ளது என்பதை தெரிந்து கொள்வதற்கு அதற்குரிய எப்ளிகேஷன் இல்லாமலேயே அதனைப் பார்வையிடுவதற்கான வழிகள் உள்ளன. வின்டோஸின் quick view என்ற யுடிலிட்டி மூலம் World Excel போன்ற எப்ளிகேஷன்களில் உருவாகியவற்றை பார்ப்பதற்கு வியூவர் புரோகிராம்கள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தியே, குறித்த ஃபைல்களை பார்வையிட முடியும். quick view plus என்ற சேர்வர் மூலம் 225 விதமான ஃபைல்களைத் திறந்து பார்வையிட முடியும். எனினும், அவற்றிற்கான எப்ளிகேஷன்கள் உங்கள் கணினியில் இருக்க வேண்டும் என்ற தேவையில்லை.

# சூடாகும் கணினியை தானாக நிறுத்தலாம்

கணினி சிறிது சூடாகியவுடன் அதனை தானாகவே நிறுத்திவிடக்கூடியவாறு கணினிக்கு கட்டளை கொடுக்கக்கூடிய வழிமுறைகள் உள்ளன. இதற்கு முதலில் Mother board என்ற இலவச மென்பொருள் தொகுப்பைக் கணினியில் இன்ஸ்ட்டோல் செய்யவேண்டும். 'மதர் போர்ட்' சூடாகி உள்ளதா என்பதைக் கணித்து அதற்கேற்ப கணினியை நிறுத்தவோ அல்லது மற்றுமொரு புரோகிராமை செயற்படுத்துவதற்கோ, அல்லது செயற்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற புரோகிராம்களை நிறுத்தவோ, வேறொரு கணினிக்கு மின்னஞ்சல் செய்தி அனுப்பவோ முடியும். குறித்த புரோகிராமை இயக்குவதன்மூலம் அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது குறித்த வழிகாட்டல்களையும் பெறமுடியும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 22, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org